# கோபுரம்

தகவல் இதழ்


ஆனி, 1994



இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## - பக்திப்பெருவிழா -



பக்திப்பெருவிழாவில் கலாநிதி த. நடராஜா அவர்களுக்கு இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் பொன்னாடை போர்த்தி கௌரவிப் பதையும் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்கள் உடன் இருப்பதையும் படத்திற் காணலாம்.

## - அறநெறிக்கல்வி மாநாடு -



களுத்துறை இந்து அறநெறிக்கல்வி மாநாட்டில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட தேசிகர்களையும், பார்வையாளர்களில் திருமதி சாந்தி நாவுக்கரசன், கவிஞர் இந்திரஜித் ஆகியோரையும் படத்திற் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுரம்

இந்துசமய, கலாசார
திணைக்கள வெளியீடு

மலர்: 5 ꕥ 1994 ꕥ இதழ்: 2

பவ வருடம், ஆனி மாதம்


## எண்ணம்

இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சு ஏற்பாடு செய்திருந்த பக்திப் பெருவிழா ஜுன் மாதம் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இம்முறை நாற்பத்தாறு அருட்பெரியோர்கள் வாழ்த்திக் கௌரவிக்கப்பட்டனர். இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்க, வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்கள் விருதுகளை வழங்கினார். அன்றைய தினம் காலை, நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த இந்து நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கருத்தரங்கு நடைபெற்றது. விழாவின் சிறப்பம்சமாக கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இன்னுமொரு பிரதான நிகழ்வாக களுத்துறையில் இந்து அறநெறிக்கல்வி மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு முன்னோடியாக களுத்துறை மாவட்டத்தில் பல ஆன்மீக நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் என்பன நடைபெற்றன, ஜுன் மாதம் 26ம் திகதி மாநாடு குளோடன் தமிழ்வித்தியாலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தமிழகக் கவிஞர் திரு. இந்திரஜித் அவர்கள் இம்மாநாட்டிற்கு சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்து கொண்டிருந்தார்.

கடந்த ஆண்டு மாவட்ட மட்டங்களில் நடைபெற்ற இந்துசமயப்போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவங்கள் தற்போது மாவட்டங்களின் பிரதான நகரங்களில் நடைபெற்று வருகின்றன.

இவ்விதழில் பிரதான செய்திகளோடு வழமையான திணைக்களச் செய்திகள், ஆன்மீகக் கட்டுரைகள் என்பனவும் இடம் பெற்றுள்ளன.

கோபுரம் இதழ் பற்றி வாசகர்கள் எழுதும் கருத்துக்களுக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். வழமை போலவே தொடர்ந்தும் உங்கள் எண்ணங்களை எழுதி உதவுமாறு வேண்டுகின்றோம்.

---

கோபுரம் இதழ்பற்றிய உங்கள் சிந்தனைகளைத் தொடர்ந்தும் எழுதி அனுப்புமாறு வேண்டுகின்றோம்.


முகவரி:-

பணிப்பாளர்,

இந்துசமய, கலாசார அலுவல்கள்
திணைக்களம்
''காப்புறுதி இல்லம்'' 9ம் மாடி,
21, வொக்ஷோல் வீதி,
கொழும்பு - 02.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திப்பெருவிழா - 1994

இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஏற்பாடு செய்து நடத்திய இரண்டாவது பக்திப்பெருவிழா ஜூன் மாதம் 11ம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அன்று காலை நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த ஆலய அறங்காவலர்கள், இந்துசமய நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்துசமயக் கருத்தரங்கு நடைபெற்றது. ''சமயம் காட்டும் வாழ்வியற் சிந்தனை'' எனுந் தலைப்பில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார். இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் ஞாயிறு பாடசாலை மாணவர்களின் தேவாரப்பண்ணிசையைத் தொடர்ந்து ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களின் அருளுரை இடம்பெற்றது.

திரு. க. சண்முகலிங்கம் அவர்களின் தலைமையுரையைத் தொடர்ந்து புலவர் க. சிவானந்தன் அவர்கள் ''திருமந்திரத்தில் அன்புநெறி'' எனும் தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார். கொழும்பு தேவாரப்பண்ணிசை மன்றத்தினர் ''நால்வர் காட்டிய நன்னெறி'' எனும் இசை நடன நிகழ்ச்சியொன்றினை வழங்கினர். திருமதி குமாரசாமி அவர்கள் தொகுத்தளித்த இந்நிகழ்ச்சியில், திருமதி கல்யாணி சுந்தரலிங்கம் அவர்களின் பரத அபிநயங்கள் இடம்பெற்றன. பண்ணிசைப் பாவலர் பி. வி. இராமனின் தேவாரப் பாடல்களுக்கு சோமாஸ்கந்தசர்மா வயலினும், வி. ஜம்புநாதன் மிருதங்கமும் இசைத்தனர்.




பக்திப்பெருவிழா - இந்துசமயக் கருத்தரங்கில், இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் உரையாற்றுகின்றார், இராஜாங்கச் செயலாளர் திரு. கா. தயாபரன், பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் உட்பட கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.

உனது சிறு செயலிலும், சிற்றறிவிலும் கூட பேராற்றல் மறைந்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANTHONY JEBYA
57, MAHINDA PLACE,
COLOMBO-6.



பக்திப்பெருவிழாவில் ''கண்டறியாதன கண்டோம்'' என்ற நிகழ்ச்சியில், இரா. நீதிராஜசர்மா அவர்கள் பூசை செய்வதையும் நாயன்மாராக வேடமிட்ட மாணவர்களையும் படத்திற் காணலாம்.

தெமட்டகொடை விபுலாநந்த அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கும்மி நடனம், இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு பாடசாலை மாணவர்களின் வில்லுப் பாட்டு, மட்டக்களப்பு விபுலாநந்த இசை நடனக் கல்லூரி மாணவர்களின் பஜனை என்பன இடம்பெற்றன.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களின் உரையைத் தொடர்ந்து கலந்துகொண்ட பிரதிநிதிகளின் கருத்துரைகள் இடம்பெற்றன. இக்கருத்துரைகளுக்கு, அமைச்சின் இராஜாங்கச் செயலாளர் திரு. கா. தயாபரன், திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் விளக்கமளித்தனர். உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா அவர்களின் நன்றியுரையுடன் காலைக் கருத்தரங்கு நிறைவு பெற்றது.

## விருதுவழங்கல், கலை நிகழ்ச்சிகள்

விருதுவழங்கலும், கலைநிகழ்ச்சிகளும் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகின. இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், ஸ்ரீமத் ஆத்மகனாநந்தா, ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

தமிழிசை அரசு திரு. வி. மு. நவரெத்தினம் அவர்களின் தேவாரத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. பணிப்பாளர்

உண்மை இருக்கும் இடத்தில் அழகும் இளமையும் பொழியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு க. சண்முகலிங்கம் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து கொழும்பு சைவ முன்னேற்றச் சங்க நால்வர் சமய பாடசாலை மாணவர்களின் ''உத்தமன் இராமன்'' எனும் நாடகம் இடம்பெற்றது. அடுத்து, ஞானசிரோன்மணி திருமதி வசந்தா வைத்தியநாதன் ''கண்டறியாதன கண்டோம்'' எனும் சிறப்பு நிகழ்ச்சி ஒன்றைத் தொகுத்தளித்தார்; திரு. வி.மு. நவரெத்தினம், திரு. பி. வி. இராமன், திரு. வ. மாணிக்கவேல், திரு. வை. பழனி நாதன் ஆகியோர் பின்னணி இசைவழங்கினர். இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு பூசை செய்பவராக சிவஸ்ரீ நீதிராஜசர்மா அவர்கள் கலந்துகொண்டார், கொழும்பு றோயல் கல்லூரி மாணவர்கள் நான்கு குரவர்களாக வேடமேற்று நடித்தனர்.

இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா ஆகியோரின் சிறப்புரைகளைத் தொடர்ந்து, விருதுவழங்கல் நிகழ்ச்சி இடம்பெற்றது. விருதுபெற்ற ஆன்மீக அருளாளர்களுக்கு அமைச்சர் அவர்கள் பொன்னாடை போர்த்தி, மாலையிட்டு கௌரவித்தார். ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்கள் விருதுகளைக் கையளித்தார்.

மட்டக்களப்பு விபுலாநந்த இசை நடனக் கல்லூரி மாணவர்களின் ''தசாவதாரம்'' எனும் நாட்டிய நாடகத்தைத் தொடர்ந்து பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களின் நன்றியுரையுடன் விழா நிறைவு பெற்றது.

இராஜாங்கச் செயலாளர் திரு. கா. தயாபரன், திணைக்களப் பணிப்பாளர் திரு. க, சண்முகலிங்கம், பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரன், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் திருமதி கீதா நித்தியானந்தன், உதவிப்பணிப்பாளர்கள் திரு. வீ. விக்கிரமராஜா, திரு. குமார்வடிவேல், திரு. ஏ. எம். நஹியா, திரு. எஸ். தெய்வநாயகம், கலாசார உத்தியோகத்தர்கள் திரு. மாத்தளை வடிவேலன், செல்வி எம் இராஜேஸ்வரி, திரு. என். தியாகராஜா ஆகியோர் உட்பட அமைச்சு, திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரும் இணைந்து விழாவின் வெற்றிக்கு பணி செய்தமை குறிப்பிடத்தக்கது.

## தவம்

இருக்கு வேதத்தில் **தபஸ்** என்னுஞ் சொல்லை முதன் முதலாகக் காண்கின்றோம். தபஸ் என்னுஞ் சொல் தமிழில் தவம் என மருவிவரும். தவத்தின் விளைவாகவே இவ்வுலகனைத்துந் தோற்றம் பெற்றது என்னுங் கருத்து இருக்கு வேதத்தில் உள்ள **நாசதீய** சூக்தத்தில் காணப்படுகின்றது. அதர்வவேதம், பிராமணங்கள், உபநிடதங்கள் முதலியவற்றிலும் தவம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. எனினும் இதிகாச புராணங்களில் இது தனிக்கருத்தினைப் பெற்றுத் தெய்வங்களை வழிபடும் வழிகளில் ஒன்றாய் உருவாயிற்று. தவம் மேற்கொண்டவன் **தபஸ்வி** எனப்பட்டான். இவன் பெறும் ஆற்றல் தபோபலம் எனப்பட்டது. தவம் மேற்கொள்ளுபவன் சலிப்புறாது தொடர்ந்து இதில் ஈடுபடுவதைப் புராணங்கள் வருணிக்கின்றன. இவை, தவத்தில் வெற்றி காண இதனை மேற்கொண்டோர் கையாண்ட வழிகளைக் கூறுகின்றன. 'தப்' என்னும் வினையடி வெப்பமூட்டுதலைக் குறிப்பது. இச்சொல் உருவாகும் நிலையில் வெறும் வெப்பப் பெருக்கையே உணர்த்தியது. புராணங்களில் தவம் கையாளப்படும் சூழ்நிலையை நாம் நோக்கும்பொழுது, வேட்பவர் தவஞ்செய்து தவாக்கினியைச் சுவாலை விடச் செய்து தம் தெய்வத்தைத் தகிக்கும் நிலையினை வருவித்தார் என்னும் வருணனையைக் காணலாம். தவத்தின் சிறந்த அம்சங்களில் ஒன்று அது யோக நெறியுடன் பூண்டுள்ள தொடர்பு.

**கர்மரகசியம் தெரிந்தவனுக்கு வாழ்க்கை ஒரு விளையாட்டரங்கு!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திப் பெருவிழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டோர்

### ஞானசிகாமணி

கலாநிதி. த. நடராஜா

### வேதாகம மாமணி

சிவஸ்ரீ ந. சோமஸ்கந்தக் குருக்கள்
சிவஸ்ரீ சுப்பிரமணியபட்டர்
சிவஸ்ரீ ச. பரமசாமிக் குருக்கள்
சிவஸ்ரீ லக்ஷ்மி நாராயணக் குருக்கள்
சிவஸ்ரீ பா. வைத்தியநாதக் குருக்கள்
சிவஸ்ரீ சீனிவாசக் குருக்கள்
சிவஸ்ரீ வை. காமாட்சி சுந்தரேஸ்வரக் குருக்கள்
சிவஸ்ரீ ப. பாலசுப்பிரமணியக் குருக்கள்
சிவஸ்ரீ இரா.இராஜராஜேஸ்வரக்குருக்கள்

### ஆகமச் சூடாமணி

சிவஸ்ரீ சண்முகரெட்னக் குருக்கள் விஸ்வநாத ஐயர்
சிவஸ்ரீ பாலசுப்பிரமணிய ஐயர் சிற்சபேசன் குருக்கள்
சிவஸ்ரீ ஜெகநாதன் நாகராசர் குருக்கள்
சிவஸ்ரீ நடராஜ ஐயர் ருத்ராசர்மா

### ஞானசிரோன்மணி

திருமதி பூமணி குலசிங்கம்
திரு. வ. சிவராஜசிங்கம்
திரு. தெ. ஈஸ்வரன்
திரு. அ. செல்லத்துரை
திரு. வ. செல்லையா
திரு. மு. நவரத்தினம்

### சிவநெறிச்செம்மல்

திரு. தேவமனோகரன் சுவாமிநாதன்
திரு. சு. கதிரமப்போடி
திரு. பி. முத்துசாமிப்பிள்ளை

### சைவ நன்மணி

திரு. ம. சிவநேசராசா
பிரம்மஸ்ரீ சோ.ஸ்ரீநடராஜ ஐயர்
திரு. ச. வேலுப்பிள்ளை
திரு. சே. கு. நடேச சர்மா
திரு. கு. ஆறுமுகதேசிகர்
திரு. சீ. வினாசித்தம்பி

### சிவஞானச் செல்வர்

திரு. க. இராஜபுவனேஸ்வரன்
திரு. செ. நடராஜா
திரு. செ. சிவபாதசுந்தரம்

### இறைபணிச்செம்மல்

திரு. ந. சுப்பிரமணியம்
திரு. க. மயில்வாகனம்
திரு. வை. செ. தேவராசா
திரு கே. செல்லமுத்துப்பிள்ளை
திரு. ச. விநாயகரத்தினம்
திரு. செ. கணேசமூர்த்தி
திரு. நா. இரத்தினசபாபதி
திரு. ச. முத்தையாபிள்ளை
திரு பெ. இராமநாதன்

### இறைபணிக்காவலர்

திரு. வி. பி. பாலசுப்பிரமணியம்
திரு. ச. சந்திரசேகரம்
திரு. செ. சிதம்பரநாதன்
திரு. பி. வி. இராமன்
திரு. வ. மாணிக்கவேல்

உலோபியின் செல்வமும் பாம்புப் புற்றிலிருக்கும் தேனும் ஒன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுத்துறையில்

# ஆன்மீக அறநெறி விழாக்கள்

களுத்துறை மாவட்டத்தில் நடைபெற்ற இரண்டாவது இந்து அறநெறிக் கல்வி மாநாட்டிற்கு முன்னோடியாக கலந்துரையாடல்களும், ஆன்மீக அறநெறி விழாக்களும் வலய மட்டங்களில் நடைபெற்றன. இவற்றில் இப்பிரதேச இந்துப் பொது மக்களும், அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

## கலந்துரையாடற் கூட்டம்

மாநாடு தொடர்பான முதற் கலந்துரையாடற் கூட்டம் மார்ச் மாதம் 5ம் திகதி மத்துகம செண் மேரீஸ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது,

தொடங்கொடை பிரதேச சபை உறுப்பினரான திரு. எஸ். டி. சதாசிவம் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த இவ்வைபவத்திற்கு இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாந்தா, உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா, கலாசார உத்தியோகத்தர்கள் மாத்தளை பி வடிவேலன், இராஜேஸ்வரி முத்துசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

கொழும்பு கல்வித் திணைக்களத்தின் சார்பில் பிரதிப்பணிப்பாளர் திரு. எஸ். நல்லையா அவர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

திணைக்கள அதிகாரிகளின் மாநாடு பற்றிய விளக்கத்தைத் தொடர்ந்து மத்துகம, புளத்சிங்கள ஆகிய இரண்டு வலய ஆன்மீக அறநெறி விழாக்களுக்கான குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

இவ்விழா மே மாதம் 8ம் திகதி மில்லா கந்த தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

## புளத்சிங்கள ஹொரண ஆன்மீக அறநெறி விழா

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் ஆத்மகனாநந்தா ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இவ்வலயத்தின் அமைப்பாளர் திரு. பொ. இராமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சுவாமிகளின் ஆன்மீக அருளுரை, தியானம், பஜனை என்பன இடம் பெற்றன.

புலவர் க. சிவானந்தன் அவர்களின் சிறப்புரை இடம்பெற்றது. திணைக்களத்தின் சார்பில் உதவிப்பணிப்பாளர்கள் திரு. வீ. விக்கிரமராஜா, திரு. குமார்வடிவேல், கலாசார உத்தியோகத்தர்கள் திரு. மாத்தளை பி. வடிவேலன், செல்வி. எம். இராஜேஸ்வரி ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

---

காலத்தை பயனுள்ள வழியிற் பயன்படுத்தாதவர்களுக்கு காலமும் காலனும் ஒன்றுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்துகம தொடங்கொட வலய ஆன்மீக அறநெறி விழா

இவ்விழா மே 15ம் திகதி மத்துகம சென் மேரீஸ் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனாநந்த ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

திணைக்களத்தின் சார்பில் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர்கள் திரு. வீ. விக்கிரமராஜா, திரு. குமார்வடிவேல், ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேல் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். நல்லையா, அவர்களும் களுத்துறை மத்துகம பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் சம்சுதீன் அவர்களும் சிறப்பு தினர்களாக கலந்து கொண்டனர்.

சுவாமிஜி அவர்களின் ஆன்மீக அருளுரை, பஜனை, தியானம் என்பவற்றை தொடர்ந்து புலவர் க. சிவானந்தன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெற்றது.

## ஆன்மீக அறநெறிக் கருத்தரங்கு

இந்து அறநெறிக் கல்வி மாநாட்டிற்கு முன்னோடியாக மே மாதம் 25ம் திகதி புதன்கிழமை காலை குளோடன் தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆன்மீக அறநெறிக் கருத்தரங்கு நடைபெற்றது.

திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள் தலைமையில் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஆரம்பமானது. மேல் மாகாண கல்விப் பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். நல்லையா, திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினர்.

புலவர் க. சிவானந்தன், பண்ணிசைப் பாவலர் பி. வி. இராமன் ஆகியோரின் செயல்முறை விளக்கம், பண்ணிசை என்பன இடம் பெற்றன.

தொடங்கொட பிரதேச சபை உறுப்பினர் திரு. சதாசிவம் அவர்களின் வரவேற்பு உரையுடன் கருத்தரங்கு ஆரம்பமானது. சுவாமி விபுலானந்தர் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் ஆ. சுகேந்திரன் நன்றியுரை நிகழ்த்தினார்.

## தேசிகர், அர்ச்சகர்களுக்கான கருத்தரங்கு

இப்பிரதேச ஆலயங்களிற் கடமை புரியும் தேசிகர், அர்ச்சகர்களுக்கான கருத்தரங்கு உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். தெய்வநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா, கலாசார உத்தியோகத்தர் திரு. மாத்தளை பி. வடிவேலன், புலவர் க. சிவானந்தன், பண்ணிசைப் பாவலர் திரு. பி. வி. இராமன் ஆகியோர் உரையாற்றினர்.

இவ்வைபவத்தில் தேசிகர்கள், அர்ச்சகர்களுக்கான நூல்கள், தமிழ் அர்ச்சனைத் தொகுப்பு என்பன வழங்கப்பட்டன.

## இந்துசமயக் கருத்தரங்கு

களுத்துறை மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், ஆலய தேசிகர்கள், அர்ச்சகர்களுக்கான இந்துசமயக் கருத்தரங்கு ஜூன் மாதம் 5ம் திகதி

நமது சொந்தச் சுகதுக்கங்களுக்கு நாமே காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைகம தமிழ் வித்தியாலய மண்டபத்தில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். தெய்வநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில், திணைக்களத்தின் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா 'அறநெறிப் பாடசாலைகளும் நடைமுறைகளும்' எனுந் தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார்.

பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ். சிவகணேசமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார், புலவர் க. சிவானந்தன் பண்ணிசைப் பாவலர் பி. வி. இராமன் இருவரும் 'ஆலய வழிபாட்டு நடைமுறைகளும் பண்ணிசையும்' எனும் பொருள் பற்றி செயல்முறை விளக்கமளித்தனர்.

இவ்வைபவத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், தேசிகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

திரு. இராமலிங்கம் அவர்களின் நன்றியுரையுடன் வைபவம் நிறைவுபெற்றது கலந்து கொண்ட அனைவருக்குப் நூல்கள், அறநெறிப் பாடசாலை தினவரவு இடாப்புகள் என்பன வழங்கப்பட்டன.

## புதிய அறநெறிப் பாடசாலை

மத்துகம ரெங்கலாந்த தோட்ட ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் புதிய அநெறிப் பாடசாலை ஒன்று ஜூன் மாதம் 19ம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. தொடங்கொடை பிரதேச சபைத் தலைவர் திரு. எஸ். டி. சதாசிவம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு இந்துசமய கலாசார திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர்களான திரு. வீ. விக்கிரமராஜா, திரு. எஸ். தெய்வநாயம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆலய நிர்வாக சபைத் தலைவர் திரு. எஸ். பக்கிரிசாமியும், செயலாளர் திரு. எஸ். சுப்பிரமணியமும் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

## மத்துகம, தொடங்கொடை அறநெறிப் பாடசாலைகள்

களுத்துறை இந்து அறநெறிக் கல்வி மாநாட்டிற்கு முன்னோடியாக இப் பிரதேசத்திலுள்ள அறநெறிப் பாடசாலைகள் பலவற்றிற்கு திணைக்கள உதவிப்பணிப்பாளர்களான திரு. வீ. விக்கிரமராஜா, திரு. எஸ். தெய்வநாயகம் ஆகியோர் விஜயம் செய்தனர்.

மத்துகம, தொடங்கொடை வலயத்திலுள்ள அறப்பலாகந்த சுவாமி விபுலானந்தர் அறநெறிப் பாடசாலை, குளோடன் அபிராமி அறநெறிப் பாடசாலை, கொலன்ராப்வாணி அறநெறிப்பாடசாலை, பயாகலை நாவுக்கரசர் அறநெறிப் பாடசாலை, கொடையேன கலைமகள் அறநெறிப் பாடசாலை, மலபட கலைவாணி அறநெறிப் பாடசாலை, எலதுவ ஞானசம்பந்தர் அறநெறிப் பாடசாலை, சென் - ஜோர்ஜ் மாணிக்கவாசகர் அறநெறிப் பாடசாலை, மத்துகம உதயசூரியன் அறநெறிப் பாடசாலை, ஆகிய பாடசாலைகளிற் பயிலும் மாணவர்களுக்கு தேவையான அப்பியாச கொப்பிகள், இந்துசமய நூல்கள் என்பன உதவிப் பணிப்பாளர்களால் வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை திரு. எஸ். டி. சதாசிவம் அவர்கள் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### அக்குரோணி

அக்குரோணி என்பது பாரத இராமாயணக் காப்பியங்களில் குறிக்கப்படும் ஒரு படையளவு. 21,780 தேர்களும் 21,780 யானைகளும், 68,610 குதிரைகளும், 1,09,350 வீரர்களும் கொண்ட படைப்பிரிவு ஓர் அக்குரோணி எனப்படும். இவ்வெண்ணிக்கை நிகண்டுகளில் வெவ்வேறு வகையாகக் கூறப்பட்டுள்ளது.

பண்புகள் குறைந்துள்ள இடத்தில் தருமமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களுத்துறை

# இந்து அறநெறிக் கல்வி மாநாடு

இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சு ஏற்பாடு செய்திருந்த இரண்டாவது அறநெறிக் கல்வி மாநாடு ஜுன் 26ம் திகதி குளோடன் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ்வைபவத்திற்கு இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனந்தா அவர்கள், தமிழகச் சொற்பொழிவாளர் கவிஞர் இந்திரஜித் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

அன்று காலை குளோடன் ஸ்ரீமுத்து மாரியம்மன் ஆலயத்தில் விழாவின் சிறப்பிற்காகவும், மக்களின் நல்வாழ்விற்காகவும் தெய்வ ஆசி வேண்டி விசேட பூசைகள் நடைபெற்றன. தேசிகர் திரு. கணேஸ் அவர்கள் அழகான முறையில் பூஜைகளை நடாத்தி வைத்தார். தொடர்ந்து குளோடன் தமிழ் வித்தியாலயத்தில் விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவியர் மங்கள விளக்கேற்றிவைத்ததைத் தொடர்ந்து பண்ணிசைச் செல்வன் திரு. வி. கணேசலிங்கம் அவர்கள் தேவாரப் பண்ணிசைத்தார். வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு பாடசாலை மாணவியர் தமிழிசை நாதம் - ஓங்கார நாதம் என்பவற்றை இசைத்தனர்.

தொடங்கொடைப் பிரதேச சபையின் எதிர்கட்சித் தலைவர் திரு. எஸ். சதாசிவம் அவர்கள் தமது வரவேற்புரையில் கண்டியில் நடைபெற்ற முதலாவது இந்து அறநெறிக் கல்வி மாநாட்டின் பெருமைகளைக் கண்டு தாம் இத்தகைய ஒரு விழாவை களுத்துறையில் நடத்தவிருந்ததாகக் குறிப்பிட்டதோடு தமது ஆர்வத்துக்கு அமைச்சர் தேவராஜ் அவர்களும் அமைச்சு, இந்துசமயத் திணைக்கள அதிகாரிகளும் அளித்த பேராதரவு காரணமாகவே இந்த மாநாடு சிறப்புற நிகழ்கிறது என்றும் குறிப்பிட்டார்.

மாநாட்டின் முதல் அமர்வு ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களின் அருளுரையுடன் ஆரம்பமானது. சுவாமி அவர்கள் வழமை போலவே எளிமையான கதைகளுடன் தமது உரையை நிகழ்த்தினார். ஸ்ரீ இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் தத்துவங்களை சிறுகதைகள் மூலம் விளக்கினார். அவரது அருளுரை மனிதனின் ஆன்மீக வளர்ச்சியை அடிநாதமாகக் கொண்டிருந்தது.


அதனைத் தொடர்ந்து களுத்துறைப் பிரதேச தோட்ட ஆலயங்களில் தேசிகர்களாகக் கடமைபுரியும் ஏறத்தாழ இருபது அர்ச்சகர்களுக்கு இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களும், சுவாமி ஆத்மகனாநந்தாஜி அவர்களும் பொன்னாடை போர்த்தி அவர்களின் ஆலயப் பணிகளை வாழ்த்தினர். இந்நிகழ்ச்சியை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் வீ. விக்கிரமராஜா அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

அடுத்து திரு. கணேஷலிங்கம் தலைமையில் தமிழில் அர்ச்சனை ஓதல் இடம் பெற்றது. அடுத்ததாக அன்று பிரதம

நல்லதாயினும் அது நல்லோர்களிடத்தில் இருந்து வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களுத்துறை இந்து அறநெறிக் கல்வி மாநாட்டில் கவிஞர் இந்திரஜித், ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா ஆகியோர் உரையாற்றுவதையும், இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், திணைக்கள உதவிப் பணிப்பாளர்கள் திரு. வீ. விக்கிரமராஜா, திரு. குமார் வடிவேல் ஆகியோர் பார்வையாளர்களுடன் இருப்பதையும் படத்திற் காணலாம்.

அதிதியாக கலந்து கொள்ளவிருந்த சுற்றுலா, கிராமிய தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் எஸ். தொண்டமான் அவர்கள் அனுப்பிய செய்திவாசிக்கப்பட்டது. இவ்விழாவுக்கென தமிழகத்தில் இருந்து வந்து கலந்து கொண்ட கவிஞர் இந்திரஜித் அவர்கள் தமது வாழ்த்துரையில் களுத்துறையில் இந்து மக்கள் திரண்டிருப்பது கண்டு தாம் பெரும் மகிழ்வடைவதாகக் குறிப்பிட்டார்.

அடுத்து இடம்பெற்ற திருமதி சுலோசனா பாலசுப்பிரமணியம் குழுவினர் பக்தி இசைவிருந்து அனைவரையும் கவர்ந்தது. முதல் அமர்வின்போது களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. சரத் ரணவக்க அவர்களின் சிறப்புரையும் இடம்பெற்றது, இவர் களுத்துறை பிரதேசத்தில் உள்ள இருபத்திநாலு ஆலயங்களுக்கு மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான நாதஸ்வரம், மேளம் என்பவற்றை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மதிய போசனத்தின் பின் இரண்டாம் அமர்வு ஆரம்பமானது. வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு பாடசாலை மாணவர்கள் 'அறநெறிப் பாடசாலை' எனும் தலைப்பில் வில்லுப் பாட்டு இசைத்தனர். தமிழகக் கவிஞர் இந்திரஜித் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவும், இராஜாங்க அமைச்சரின் சிறப்புரையும் இடம்பெற்றன.

கலை நிகழ்ச்சிகளில் அபிராமி அறநெறிப் பாடசாலை மாணவியரின் கும்மி நடனம், விபுலானந்த அறநெறிப் பாடசாலை மாணவி ந. ஜெயகௌசல்யாவின் துர்க்கை நடனம், மாணிக்கவாசகர் அறநெறிப் பாடசாலை மாணவியரின் கும்மி நடனம் பாந்திய அறநெறிப் பாடசாலை செல்வி, எஸ். சகுந்தலா தேவியின் கரகாட்டம் என்பன இடம்பெற்றன.

சிறுவர் சிறுமியர் இணைந்து அளித்த ஆன்மீக உடைப் போட்டியும் இடம்

உன்னை உன்வசப்படுத்தினால் மற்றவர்களும் வசப்படுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது. ஔவையார், சம்பந்தர், அப்பர், சுந்தரர் வடிவம் தாங்கி சிறுவர்கள் போட்டியில் கலந்துகொண்டனர். அடுத்து இந்துசமயத் திணைக்கள உதவிப்பணிப் பாளர் திரு எஸ். தெய்வநாயகம் அவர்கள் விளக்கமளிக்க, பண்ணிசைப் பாவலர் திரு. பி. வி. இராமன் பண்ணிசைப் பாட 'தமிழோடு இசை பாடல்' எனும் நிகழ்ச்சி இடம்பெற்றது. இறுதி வைபவமாக பரிசளிப்பு இடம்பெற்றது. கடந்த ஆண்டு நடைபெற்ற இந்து சமயப் போட்டிகளில் இரண்டாம், மூன்றாம் பரிசு பெற்ற மாண வர்களுக்கும், இம்மாநாட்டினை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் பரிசுபெற் றோருக்கும் முறையே திரு வீ. விக்கிரம ராஜா, திரு. குமார்வடிவேல், திரு. எஸ். தெய்வநாயகம், திரு. என். சதாசிவம், திரு. எம். சிவகணேசமூர்த்தி, திரு. எஸ். நடராஜா, செல்வி. எம். இராஜேஸ்வரி ஆகியோர் நூற் பரிசுகளை வழங்கினர்.

இந்துசமயத் திணைக்களத்தின் சார் பில் பிரதிப் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர்கள் திரு. வீ. விக்கிரமராஜா, திரு. குமார் வடிவேல், திரு. எஸ். தெய்வநாயகம், கலாசார உத்தியோகத்தர் செல்வி. எம். இராஜேஸ்வரி ஆகியோரும் உத்தியோகத் தர்களும் கலந்து கொண்டனர்.

மாநாடு பற்றிய முயற்சிகள் ஆரம்பிக் கப்பட்ட நாளிலிருந்து பூரண ஆதரவு நல்கிய கொழும்பு கல்வித் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். நல்லையா அவர்களும், அன்றைய விழாவிற் கலந்து சிறப்பித்தார்.

மாநாட்டு அமைப்பாளர்களாக கடமை செய்த திரு. எஸ். டி. சதாசிவம் திரு. எம். சிவகணேசமூர்த்தி, திரு. பொன் இராமலிங்கம் ஆகியோர் உட்பட பிரதேச பாடசாலை அதிபர்கள், பிரமுகர்கள் அனைவரும் விழாவின் வெற்றிக்கு தமது பூரண உதவிகளை நல்கி இருந்தனர்.

விழா நிகழ்வுகளை இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ப் பிரிவுக் கட்டுப்பாட்டாளர் திரு. வி. என். மதியழ கன் அவர்கள் அழகாகத் தொகுத்தளித் தார். ஒரு புறம் இராமகிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் சமய நூல்களின் விற்பனையும் இடம் பெற்றது.

ஹொரணை பிரதேச சபை உறுப்பினர் திரு. எம். வி. சிவகணேசமூர்த்தி அவர் களின் நன்றியுரையுடனும், திரு வி. கணேச லிங்கம் அவர்களின் தேவாரத்துடனும் மாநாடு இனிதே நிறைவு பெற்றது

## அங்காளம்மை

அங்காளம்மை சக்தி வழிபாட்டிற் கமைந்த தெய்வங்களுள் ஒன்றாகும். அங்காளி, அங்காளதேவி என்னும் பெயர்களும் இத்தெய்வத்திற்கு உண்டு. இத் தெய்வத்தின் வடிவமைப்பினைப் பற்றி, 'தியான சுலோகம், என்ற சிற்ப நூலில், சிவந்த திருமேனி, சுடரிதழ் மகுடம், நான்கு திருக்கரங்கள் சூலாயுதம் ஏந்திய நிலை, கோர வடிவம்' என்பன கூறப் பட்டுள்ளன.

கண்ணகியே காளி வடிவெடுத் துப் பழி தீர்த்துக்கொண்டாள் என் னும் தெருக் கூத்தின் நிகழ்ச்சி வழக் காக, அங்களாம்மை கண்ணகியின் கோர வடிவென்றும் கூறுவர்.

பொற்கொல்லரும் அம்மர பினைச் சார்ந்த கம்மாளரும் குல தெய்வமாகக் கொண்டு இத் தெய்வத் தினை வழிபட்டு வருகின்றனர்'

தஞ்சைத் தெற்கு வீதி, குடந் தைக் கம்பட்ட விசுவநாதன் தெற்கு வீதி, கீழ்வேளூர் தெற்குத் தெரு ஆகிய இடங்களில் உள்ள இவ்வம்மை யின் திருக் கோயில்கள் வரலாற்றுச் சிறப்புடையனவாகும்.

தர்மத்திற்கு இருக்கும் அதே ஆயுள் அதர்மத்திற்கும் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திணைக்களச் செய்திகள்

## இலங்கையில் இந்துசமயப் பண்பாடு பற்றிய ஆய்வுகள்

இலங்கையில் இந்து சமயத்தின் வரலாறு, சமய நம்பிக்கை, வழிபாட்டு முறை, சமயக் கருத்தியல் ஆகியவற்றின் வளர்ச்சி பற்றியும், சமயத்தோடு இணைந்து வளர்ச்சி பெற்ற கட்டடக் கலை, விக்கிரக வார்ப்புக் கலை, இசை, நடனம், கூத்து ஆகிய கலை வடிவங்களின் வளர்ச்சி பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்வதற்கான திட்டத்தினை இந்து சமய, கலாசார இராஜாங்க அமைச்சு செயல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்திற்குச் செயல் உருவம் கொடுக்கும் நோக்கத்தோடு இத்துறை அறிஞர்களைக் கொண்ட கூட்டமொன்று ஏப்ரல் மாதம் அமைச்சு அலுவலத்தில் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் தலைமையில் நடைபெற்றது, பேராசியர்கள் கா. சிவத்தம்பி, சி. பத்மநாதன் ஆகியோரும் திரு. ஆ. தேவராஜனும் இக் கூட்டத்தில் பங்குபற்றித் தம் ஆலோசனைகளை வழங்கினர்.

இலங்கையின் இந்து சமயப் பாரம்பரியம் பற்றியும் அதைச் சார்ந்து வளர்ச்சியுற்ற கலைகளைப் பற்றியும் ஆய்வு நூல்கள் போதியளவு வெளியிடப்படுவதில்லை. ஆங்கிலத்தில் கூட இவ்விடயம் பற்றித் தகுந்த ஆய்வு நூல்கள் அரிதாகவே உள்ளன. இதனால் எமது சமயம், பண்பாடு பற்றிய தவறான கருத்துக்களும் மேலோட்டமான அபிப்பிராயங்களும் பரவுவதற்கும் நிலை பெறுவதற்கும் இடம் ஏற்பட்டுவிடும் என்றும் இக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

ஆய்வு நூல்களை வெளியிடுவது மட்டுமன்றி எமது முன்னோர் எமக்கு இட்டுச் சென்றுள்ள கலைச் சின்னங்கள், நூல்கள், ஆவணங்கள், கல்வெட்டுக்கள், வரலாற்றுச் சான்றுகள் ஆகியன பேணப்படுதலும் பாதுகாக்கப்படுத்தலும் அவசியம் என்பதும் இக்கூட்டத்தில் சமூகம் அளித்த பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்துக் கோயில்களின் வரலாறு, கிடைத்தற்கரிய தமிழ் நூல்களை மறுபதிப்புச் செய்தல் ஆகிய இரு செயற்திட்டங்களும் அமைச்சினால் செயற்படுத்தப்பட்டுள்ளதை அமைச்சர் குறிப்பிட்டார். இத்திட்டங்களோடு பின்வரும் ஆறு செயற் திட்டங்களை உடன் ஆரம்பிப்பது எனவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

1. இலங்கையில் இந்துக்களிடையே நிலவும் கலைகள், கைவினைத் தொழில்கள் பற்றிய தரவுகளை கள ஆய்வு மூலம் தொகுத்தலும், வகைப் படுத்தலும், ஆய்வு செய்தலும்.
2. இலங்கைத் தமிழ் இலக்கியத் தொகுப்பு ஒன்றின் ஆங்கில மொழி பெயர்ப்பினைப் பதிப்பித்து நூலாகப் பிரசுரித்தல்.
3. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய ஆங்கிலக் கட்டுரைத் தொகுதியொன்றை வெளியிடல்.
4. இலங்கையில் இந்து சமயம் என்னும் தலைப்பிலே வரலாற்று நூல் ஒன்றை எழுதி வெளியிடல்.

சுயநலம் கருதிய கடமையும் சேவையும் துன்பத்திற்கு காரணமாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இந்து சமய வழிபாட்டு முறைகள், சமயக் கருத்தியல், கோயில்சார் கலைகள் ஆகிய விடயங்களை உள்ளடக்கிய ஆய்வுத் தொகுதியொன்றை ''இலங்கையில் இந்துப் பண்பாடு'' என்னும் தலைப்பில் வெளியிடுதல்,

6. இலங்கையின் பல்வேறு இடங்களில் கிடைத்துள்ள இந்து விக்கிரகங்கள் பற்றிய தரவுகளை காலவரிசைப்படி கோவைப்படுத்தி இந்து விக்கிரகக் கலையின் வளர்ச்சி பற்றி விளக்கும் ஆய்வு நூல் ஒன்றை எழுதி வெளியிடுதல். இதுபற்றி அதிக கவனம் செலுத்தப்படுவதன் அவசியத்தை அமைச்சர் தேவராஜ் சுட்டிக் காட்டினார்.

முதற் கட்ட வேலையாக மேற்குறித்த ஆறு செயற்திட்டங்கள் பற்றிய திட்ட அறிக்கைகளை உடனடியாகத் தயாரிப்பது எனவும் இத்திட்டங்களுக்கு வேண்டிய நிதியினைப் பெறும் வழிவகைகளைச் செய்தல் வேண்டும் எனவும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## நவீன கால மதம்

திணைக்களம் நடத்தும் இந்துப் பேருரைத் தொடரின் அறுபத்தேழாவது சொற்பொழிவு மே மாதம் 25ம் திகதி இராஜாங்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இச் சொற்பொழிவு நிகழ்ச்சியில், இராமகிருஷ்ண மிஷன் நிலையத்தின் அகில உலக செயலாளர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மஸ்தானந்தா அவர்கள், நவீனகால மதம் எனுந் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

## மாமாங்கத்தில் மகா சிவராத்திரி விழா

இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில் மகா சிவராத்திரி விழா மார்ச் மாதம் 10ம் திகதி மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு அரச அதிபர் இ. மோனகுருசாமி அவர்கள் தலைமையில் விசேட நான்கு சாமப் பூசைகள் நடைபெற்றன.

தமிழகத்திலிருந்து வருகை தந்த வி. கே. மாதவன் குழுவினர் பக்தி இசை நிகழ்ச்சி அளித்தனர். கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களின் பட்டிமன்றம், இசை நடனக் கல்லூரி மாணவர்களின் பஜனை உட்பட சிறப்பான பக்தி நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இவ்வைபவத்தை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவை நேரடி அஞ்சல் செய்தது.

நாத்தழுதழுப்ப உள்ளங்கசிந்து நாணமின்றிச் சில சமயம் மிகுதியாக அழவோ, சிரிக்கவோ உரக்கப் பாடவோ ஆடவோ செய்யும் என் பக்தன் உலகத்தையே தூய்மையாக்குகிறான்.

புடமிட்ட பொன் மாசு நீங்கித் தன் சுயநிலையை மீண்டும் பெறுவதுபோல, என் மீது செலுத்தும் ஒருமுகப்பட்ட பக்தியால் மனம் கரும இச்சையை எறிந்துவிட்டு என்னையே அடைகிறது.

ஐம்புலப் பொருள்களைத் தியானிப்பவனது உள்ளம் அவற்றிற் பற்றுடைகிறது; ஆனால் என்னையே நினைப்பவனது உள்ளமோ என்னிலே மட்டும் ஒன்றிவிடுகிறது.

— பகவான் இருஷ்ணர் —

ஒழுக்கம் குறைந்த சமுதாயம் கெட்ட பாலுக்குச் சமமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவிற்கான ஏற்பாடுகளை திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல், கலாசார அலுவலர் செல்வி. தங்கேஸ்வரி கதிராமர் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

பெருந் திரளான இந்து மக்கள் இவ் விழாவிற் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சேர் முத்துக் குமாரசாமி பற்றிய சொற் பொழிவு

திணைக்களம் நடத்தும் இந்துமதப் பேருரைத் தொடரின் அறுபத்தாறாவது உரை மே மாதம் 7ம் திகதி மாலை அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் திரு. சி. குமாரசாமி அவர்கள், ''சைவ சித்தாந்த தத்துவமும் சேர் முத்துக்குமார சுவாமியும்'' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

சைவத் தமிழறிஞரான சேர். முத்துக் குமாரசுவாமியின் 115-வது நினைவு தினத்தை முன்னிட்டு இப்பேருரை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாரதி – புதுமைக் கவிஞன்

திணைக்களத்தின் தமிழ் அலுவல்கள் பிரிவு ஏற்பாடு செய்திருந்த வழக்காடு மன்றமொன்று ஏப்ரல் மாதம் 2ம் திகதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

''பாரதி புதுமைக் கவிஞன்'' என்ற கருத்தில் தமிழ்நாடு திண்டுக்கல் பேராசிரியை திருமதி. புனிதா ஏகாம்பரம் வழக்காடினார். தூத்துக்குடி திரு. பழனி கிருஷ்ணன் இக்கருத்தை மறுத்துப் பேசினார்.

இந்நிகழ்ச்சிக்கு தமிழகப் பேராசிரியர் திரு. பா. நமசிவாயம் அவர்கள் நடுவராகக் கடமையாற்றினார்.

## கோமல் சுவாமிநாதன் சொற்பொழிவு

தமிழகத்தின் பிரபல நாடகக் கலைஞரும் 'சுபமங்களா' இலக்கிய இதழின் ஆசிரியருமான கோமல் சுவாமிநாதனின் ''தமிழ் அரங்கியல் மரபும் புத்தாக்கமும்'' என்ற சிறப்புச் சொற்பொழிவொன்று ஏப்ரல் மாதம் 7ம் திகதி மாலை அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். உதவிப் பணிப்பாளர் திரு. ஏ. எம். நஹியா அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

## குளிர்த்திப் பாடல்கள்

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி. சி. மௌனகுரு அவர்களின் தலைமையில். தமிழ்த் துறை விரிவுரையாளர் திரு. பாலசுகுமார், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கிழக்கிலங்கையில் மிகவும் புகழ் பெற்ற பாரம்பரிய இசை நிகழ்ச்சியான குளிர்த்திப் பாடல்கள் இசை வடிவத்தை ஜூன் மாதம் 4ம் திகதி திணைக்களக் கேட்போர் கூடத்தில் செய்து காட்டினர். இராஜாங்க அமைச்சர் பி. பி தேவராஜ் அவர்கள் இந் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

கிழக்கின் கண்ணகி அம்மன் கோயில்களில் இசைக்கப்பட்டுவரும் இப்பாரம்பரியப் பாடல்களைப் பாட மரபுவழி அண்ணாவிமார், உடுக்கிசைக் கலைஞர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஏழைமக்களைப் பற்றி நினையாத இருதயத்தில் இறைவன் நுழைவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வருட தமிழ் சாகித்திய விழாத் தொனிப் பொருளான ''தமிழ் அரங்கியல்'' நிகழ்வின் முன்னோடியாக இந் நிகழ்ச்சியினை திணைக்களத்தின் தமிழ் அலுவல்கள் பிரிவு ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்துப் பேருரை

திணைக்களம் நடத்தும் இந்துப் பேருரைத் தொடரின் 65வது சொற்பொழிவு மார்ச் மாதம் 1ம் திகதி மாலை இந்து கலாசார அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இச் சொற்பொழிவில் மலேஷியாவிலுள்ள உலக ஆன்மீகப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிரம்மகுமாரி ஜானகி பத்மநாதன் அவர்கள், ''மனித வாழ்க்கையின் நேரடிக் காரணிகள்'' எனுந் தலைப்பில் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினார்.

## பி. கே. மாதவன் இலங்கை விஜயம்

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களின் அழைப்பின் பேரில் தமிழ் நாடு, இன்னிசைக் கலைஞரான பி. கே. மாதவன் தமது குழுவினருடன் மார்ச் மாதம் இலங்கை வந்திருந்தார்.

திரு. மாதவன் தமிழகத்தில் வாரியார் சுவாமிகளால் ''தேமதுரத் தெய்வீகத் தமிழிசைத் தென்றல்'' எனப் பாராட்டப்பட்டவர்.

இவரது பக்தி இசை நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு மாமாங்கேசுவரர் ஆலயத்திலும், கொழும்பு, மயூரபதி பத்திரகாளியம்மன் ஆலயத்திலும் கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேசுவரர் ஆலயத்திலும், பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலத்திலும் கொழும்பு 15, ஸ்ரீமத் அருணாசலேசுவரர் ஆலயத்திலும், பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் ஆலயத்திலும், வவுனியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலும், திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்திலும் நடைபெற்றன.

இவரது குழுவில் வயலின் திரு. இராதா கிருஷ்ணன், மிருதங்கம் திரு. சங்கரன், மோர்சிங் திரு. கிருஷ்ணன் ஆகியோர் பின்னணி இசை வழங்கினர்.

திரு. மாதவன் அவர்களின் நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை உதவிப்பணிப் பாளர் திரு. குமார்வடிவேல், கலாசார உத்தியோகத்தர் இராஜேஸ்வரி முத்துசாமி ஆகியோர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விபுலாநந்த இசைநடனக் கல்லூரி சான்றிதழ் வழங்கும் வைபவம்

மட்டக்களப்பு விபுலாநந்த இசை நடனக் கல்லூரியின் டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கும் வைபவம் மே மாதம் 28ம் திகதி சனிக்கிழமை காலை கல்லூரியின் மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்திற்கு பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் கலந்து சிறப்பித்தார். மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் அஜிராத்மானந்தாஜி மாவட்ட அரசஅதிபர் திரு. இ. மோனகுருசாமி, மாநகர முதல்வர் திரு. செழியன் பேரின்பநாயகம், ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டனர்.

அமைச்சின் சார்பில் இராஜாங்கச் செயலாளர் திரு. கா. தயாபரன் திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு.

தவப்பயனுக்கு பிரமச்சரியம் என்ற பத்தியம் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். தெய்வநாயகம் கலாசார உத்தி யோகத்தர்கள் செல்வி, தங்கேஸ்வரி கதிராமன், திரு. என். தியாகராஜா ஆகி யோர் கலந்துகொண்டனர்.

கல்லூரி அதிபர் திருமதி தட்சணா மூர்த்தி அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து திரு. க. சண்முகலிங்கம் அவர் களின் தலைமையுரை இடம்பெற்றது.

பிரதம அதிதியாக கலந்துகொண்ட இராஜாங்க அமைச்சர் 1993ம் ஆண்டு நான்காண்டு கற்கைநெறியை முடித்துக் கொண்ட 7 மாணவர்களுக்கு டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கினார்.

அமைச்சரின் சிறப்புரையைத் தொடர்ந்து மாணவமாணவியரின் நாட் டியநாடகம், பிருந்தகானம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

கல்லூரி ஆசிரியை திருமதி கமலா ஞான தாஸ் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

## இந்துகலாசார நிலையத் திறப்பு விழா

இந்துசமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பல லட்சக் கணக் கான ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட மட்டக்களப்பு நொச்சிமுனை இந்து கலா சார நிலையம், மே மாதம் 28ம் திகதி சனிக்கிழமை காலை சுபநேரத்தில் மாண்புமிகு அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் இராமகிருஷ்ண மிசன் சுவாமி அஜிராத்மானந்தா, மாவட்ட அரசஅதிபர் திரு. இ. மோனகுருசாமி மாநகர முதல்வர் செழியன் பேரின்ப நாயகம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஹிஸ்புல்லா உட்பட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர், அமைச்சின் சார் பில் இராஜாங்கச் செயலாளர் கா. தயா பரன், பணிப்பாளர் திரு சண்முகலிங்கம், பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். தெய்வநாயகம், கலாசார உத்தி யோகத்தர்கள் செல்வி. தங்கேஸ்வரி திரு. என். தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிலையம். இந்துகலாசார பண் பாட்டு வளர்ச்சிகளுக்கு உறுதுணையாகத் திகழவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்துசமயப் போட்டி மாவட்ட பரிசளிப்பு விழாக்கள்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கடந்த ஆண்டு மாவட்ட மட்டத்தில் நடத்திய இந்துசமயப் போட்டி களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவங்கள் அவ்வம் மாவட் டங்களிலேயே நடைபெற்றன.

## கொழும்பு

கொழும்பு மாவட்டப் பரிசளிப்பு வைப வம் மே மாதம் 12ம் திகதி கொழும்பு-2 சைவ முன்னேற்றச் சங்க நால்வர் மணி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. சி. தனபாலா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்கள் பிரதம அதிதி யாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்,

## இரத்தினபுரி

இரத்தினபுரி மாவட்ட பரிசளிப்பு விழா மே மாதம் 12ம் திகதி காவத்தை "தமிழ் மகா வித்தியாலய மண்டபத்தில் அற

(இதன் தொடர்ச்சி 24ம் பக்கம் பார்க்க)

ஞானியின் அறிவு அகக்கண்ணாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதங் காட்டும் இந்துப் பண்பாடு

பேராசிரியர், கா. கைலாசநாதக் குருக்கள்

இந்தியாவிற் பெருமளவில் அநுட்டிக்கப்பட்டுவரும் மதத்தை இந்து மதமென வெளிநாட்டவர் கூறுவர். பல உட்பிரிவுகளைக் கொண்டு உள் அமைப்பில் வேறுபாடுகளையுங் கொண்டமைவதாக இம் மதம் தோற்றமளிக்கின்றது. தம்முட் பெருமளவில் வேறுபடும் இயல்புகள் பொருந்திய இடத்தும் எந்த உட்பிரிவும் இந்து மதமாகவே குறிக்கப்படும் மரபு தோன்றி வளரலாயிற்று. சைவர்களாயினும் வைணவர்களாயினுஞ் சாக்தர்களாயினும் இந்துக்களெனவே சுட்டப்படுகின்றனர். இவ்வாறு உட்பிரிவுகளாகக் கருதப்படும் மதங்களுள் முக்கியமானவை ஆறு எனலாம். இவை, காணபத்யம், கௌமாரம், சௌரம், வைணவம், சாக்தம், சைவம் எனப்படுவன. இம்மதங்களைத் தழுவிச் சமயக் கருத்துக்களுந் தத்துவக் கருத்துக்களும் வளரலாயின. இவ்வாறனுட் சைவத்திற்குத் தனிச்சிறப்புண்டு. இன்று அநுட்டிக்கப்பட்டுவரும் நிலையில் இம்மதம் ஏனைய ஐந்தினையும் தனது உள்ளுறுப்புக்களாக ஏற்றுத் தன்னுள் அடக்கிப் பரந்து விரிந்த பெருமதமாக அமைந்து விளங்குவது இதன் பெருமை. மேனாட்டவர்கள் சூட்டிய இந்து மதம் என்ற பெயருக்குத் தனி உரிமை வாய்ந்ததாகச் சைவம் பல வகைகளில் விளங்குகின்றது. எனவே இந்து என்றால் சைவம். சைவம் என்றால் இந்து என்று உணரும் நிலை பிறந்துள்ளது.

இவ்வாறு தனித்தனி வெவ்வேறு மதங்களாகக் குறிப்பிடப்படும் உள்ளுறுப்புக்களாகிய பலவற்றையும் ஒன்றிணைத்து ஒரு மதமாகப் பேசவைப்பதற்கு வேதமே சுரகாரணமாக விளங்குகின்றது, உள்ளே ஊடுருவி நிற்கும் நூல் மறைந்து நின்று பல முத்துக்களைச் சிதறவிடாது பிணைத்து ஒரு முத்துமாலை என்ற பெயரை வருவிப்பதுபோன்று வேதம் பல மத வகைகளை ஊடுருவிப் பிணைத்து நின்று எல்லா மதங்களையும் ஒன்றிணைத்து இந்து மதம் என்று பெயர் சூட்டிப் பேச வைக்கின்றது. எனவே எல்லாத் தெய்வங்களையுந் தன் வழிபாட்டு முறைக்குட் பரிவாரங்களாக உள் அடக்கிய மதாநுஷ்டானச் சிறப்புப் பெற்ற சைவம் வேத பாரம்பரியத்தின் அடிப்படையில் இயங்கும் காரணம்பற்றி வைதிக சைவம் எனப்படும். இச்சைவம் வேதநெறி நிற்பதாகத் திருமுறைகள் சுட்டுகின்றன.

வேதங்களிற் பல தெய்வங்கள் உயரிய நிலையில் விதந்து கூறப்படினும் இவ்வாறு பலவாகக் கூறப்பட்டவை ஒன்றின் பல வகைத் தோற்றமே என வேதவாக்கியமே கூறுவதைப் பிரமாணமாகக் கொண்டு வேதங் கூறுவது சிவனையே என அறிஞர் விளக்கங்கள் கூறுவர். வெளிப்படாது உருக் கரந்து உறையும் இயல்பினர் தேவர்கள் என்பது சுருதிவாக்கியம். சிவபிரான் வேதங்களுக்கும் எட்டாதவன் என்பது அருளாளர் அநுபவ வாக்கு.

வேதங்களுக்கு மறை என்ற சிறப்புப் பெயர் வழங்குகின்றது. இது மறையாக இருந்து அறிவை மறைமுகமாகவே உணர்த்தும். எனவே ஆழமாக உற்று நோக்கும் ஞானியர்க்கு மட்டுமே வேதங்கள் உணர்த்தும் உண்மைப்பொருள் விளக்கம் பெறும். இஞ்ஞானியர்கள் காலத்துக்குக் காலந் தோன்றித் தமக்கு வெளிப்பட்ட விளக்கங்களை மறைவழி நின்று தோத்திரங்களாகவும் சாத்திரங்களாகவும் திருமுறைகளாகவும் அருள்வாக்குகளாகவும் வழங்கி வந்துள்ளார்கள். மறைகளை வழங்கிய இறைவனே ஆகமங்களை விளக்கவடிவில் தெளிவாக உணர்த்தப்படுவோர் உணரும்

இறைவன் என்பது மத நம்பிக்கையாளர்களின் கற்பனைப் பொருள் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் அருளியிருப்பதாகப் பாரம்பரியம் கூறும். வேதங்கள் மறைந்து நிற்பன. ஆகமங்கள் அண்ணித்து நிற்பன. ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க என்பது அருள் மொழி.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வழிகளை உணர்த்தும் முதல் நூலாக, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு லட்சியங்களை அடைவிக்கும் வழிகாட்டியாக, விளங்கும் வேதங்கள், மக்கள் செவ்விதாக இம்மையிற் பண்பட்டு வாழவும், மறுமையில் இதை விடச் சிறந்ததொன்றுமில்லை எனச் சுட்டப்படும் உயர் கதியாகிய மோட்சப் பேரின்பப் பெருவாழ்வைப் பெறவும் வழி காட்டியுள்ளன. எனவே வேத நெறி நின்று ஒழுகும் இந்து மக்கள் பெரும் பண்பட்ட வாழ்க்கைச் சிறப்பு வாய்ந்தவர்களே. இவ்வாறு சிறப்புற வாழ்ந்த ஆன்றோர்கள் தம் நுண்ணறிவால் வேதப் பொருளை உணர்ந்து வாழ்ந்ததோடு நின்றுவிடாது அவ்வாறு வாழும் முறையை ஏனையோர்க்கு உணர்த்தும் முகமாக அறநூல்களாகவும், பொருள் நூல்களாகவும், இன்ப நூல்களாகவும், வீடுணர்த்தும் ஞான நூல்களாகவும் உருவாக்கியுள்ளார்கள். இந்துக்களுக்கு வழங்கப்பெற்ற இப்பேறு தனிச்சிறப்பானது. ஏனெனின் இவ்வாறு வகுத்துரைக்கப்பெற்ற பேற்றினை இந்துக்களொழிந்த வேறெவரும் இவ்வளவிற்குப் பெற்றிலர். இதுவே வேதங் காட்டும் இந்துப் பண்பாட்டின் பெரும் சிறப்பு.

ஒவ்வொரு சமயத்திலும் முக்கியமாகக் கருதப்படுவது அதன்வழி நின்று அநுட்டிக்கும் முறையேயாகும். இவ்வநுட்டானத்தின் இன்றியமையாத அமிசம் கிரியை. இந்துக்களின் கிரியைகள்பற்றி முதன் முதல் வழங்கப்பட்ட நூல் வேதங்களின் பகுதிகளாயமையும் பிராமணங்களாகும். இவற்றை உற்று நோக்கி ஆராய்ந்தால் இவையே பாரதத்தில் தோன்றி இன்று வரை விளங்கிவரும் கலைகள் யாவற்றிற்கும் மறைமுகமான மூலங்களாக, வித்துக்களாக, அமைந்திருப்பதைக், காணலாம். கணிதம், வான விஞ்ஞானம், இலக்கியம், இலக்கணம், யாப்பு, மொழி இயல் முதலியன முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை. மேலும், கட்டிடக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை முதலிய கலைகளின் பிறப்பிடமாகவும் இவற்றைக் குறிப்பிடலாம்.

வேதப் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு மேனாட்டு ஆராய்ச்சியாளர் அக்காலமக்கள் வாழ்க்கைப் பற்றி விமரிசித்து வருணித்துள்ளார்கள். இவர்கள் தரும் வரலாற்றை அவதானிக்கும்பொழுது வேதங்கள் காட்டும் பண்பாட்டுச் சிறப்பு மேலும் ஓங்கிநிற்பது தெளிவாகத் தெரிகின்றது.

பொது நூலாக விளங்கும் வேதங்கள், சிறப்பு நூல்களான ஆகமங்களால் விளக்கம் பெறுகின்றன. ஆகமங்களுஞ் சமயம், தத்துவம் ஆகியவற்றை வளம்பெற வைத்துப் பண்பாட்டைச் சிறப்பிக்கின்றன. ஆகமங்கள் வழங்கிய அறிவின் வெளித்தோற்றமாக இருப்பனவே பாரத நாட்டில், விசேடமாகத் தென்னாட்டில் வானளாவி விளங்கும் கோபுரங்களையும் விமானங்களையும் ஏனைய கலைவெளிப்பாடுகளையும் கொண்டமைந்த திருக்கோயில்கள். இக்கோயில்கள் கட்டடக்கலை; சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நாட்டியக் கலையான நுண்கலைகளையும் ஏனைய கலைகளையும் பேணி வளர்த்து வந்துள்ளன. ஆகம மரபு காட்டுங் கிரியைகளே இக்கலை வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது மட்டுமல்லாமல் தாமும் சிறந்த கலையம்சம் மிகுந்து விளங்குகின்றன.

தொகுத்துக் கூறுமிடத்து, சமயம், தத்துவம், கலைகள், வாழ்க்கைச்சிறப்பு, சமுதாய வளர்ச்சி ஆகியன இந்துக்களிடை வளர்ந்த அளவிற்கு வேறு எங்கணும் வளரவில்லை என்பது தெளிவாகின்றது.

'சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், என்னும் நூலிலிருந்து.

இந்து மதம் என்பதற்கு இன்னொரு பொருள் சனாதன தர்மம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு

– ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் –

ஆலயம் என்பது உடல் என்னும் ஆலயத்தின் வெளி உருவமேயாகும். இதை நமக்குத் தோன்றிய விதமெல்லாம் அமைத்துவிட முடியாது. மூலஅமைப்பான நம்முடைய சரீரத்தின் தத்துவங்களை அது ஒத்திருக்க வேண்டும். ஆகையினால்தான் ஆலயங்களை இன்னின்ன விதத்தில் கட்ட வேண்டும் என்று ஆகமங்கள் ஆணையிடுகின்றன. அத்தகைய அமைப்பிலிருந்து நம்முடைய உடம்பின் உண்மையான தத்துவத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அந்த அறிவுக்கேற்ப வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொள்வதும் நமது கடமையாகும்.

## இராஜகோபுரம்

ஆலயத்தில் பெரிய பிரகாரம் ஒன்று அமைக்கப்பட்டு, அதன் வாயிலில் இராஜ கோபுரம் அமைக்கப்படுகிறது. கோயிலுக்குள்ளே இருக்கும் கோபுரங்கள் எல்லாவற்றையும்விட இது உயர்ந்ததாக இருக்கும். வெகுதூரத்திலிருந்தும் இதைப் பார்க்கலாம். ஆகையால் இதையே தெய்வ சொரூபமாக எண்ணி வணங்கலாம். அதனால் இதற்கு ஸ்தூலலிங்கம் என்றும் பெயர். எட்ட இருப்பவர்களுக்கும் கடவுளைப் பற்றி ஞாபகப்படுத்துவதற்கே அது அமைந்திருக்கிறது.

இராஜகோபுரத்தில் கணக்கற்ற வடிவங்கள் இருக்கும். மானுடர்கள் இருப்பார்கள்; அவர்களுடைய வாழ்க்கைமுறை இருக்கும். தேவர்களும், கந்தர்வர்களும் இருப்பார்கள்; அவர்களுடைய அதிசய வடிவங்களும் காணப்படும். விலங்கினங்களும், பறவை இனங்களும் இருக்கும்; அவை பலவாறாகவும் இடம்பெறும் இப்படி உலகில் உள்ள அனைத்துயிர்களும் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் இடம்பெறுகின்றன என்பதையே அவை காட்டுகின்றன.

இராஜகோபுரத்தில் அசுசியான சில வடிவங்கள் அமைந்திருப்பதையும் காணலாம். மனதில் மேலான கருத்துக்களை ஊக்குவிக்க அவை உதவ முடியாது. பின் அவை எதற்கு? உலகியலான எல்லாமே, உலகியல் வாழ்வின் புறச்சின்னமாக அமைந்துள்ள கோயிலில் இடம்பெற வேண்டும் என்பதே அதன் தத்துவம். நம்முடைய வாழ்க்கையில் வெளிப்படையானது, உள்ளே மறைக்கப்பட்டது இரண்டுமே உண்டு. நம்முடைய அவயவங்களிலும் இப்படி உண்டு. அதுதான் இயல்பு என்றும், உடல் அமைப்பு என்றும் நாம் எடுத்துக் கொள்கிறோம். உடல் அமைப்பையே ஒட்டி அமைந்துள்ள இராஜ கோபுரத்திலும் இந்த இருவிதங்களையும் நாம் காணுவதே இயற்கையானது.

## வாயில்கள்

எவ்வளவு பெரிய மாளிகையானாலும் நம்முடைய வீட்டிற்கு ஒரே ஒரு வாயில் தான் இருக்கிறது. அதன் வழியாகத்தான் உள்ளே நுழைகிறோம். ஆலயத்துக்கு மட்டும் இத்தனை வாயில்கள் ஏன்? அதன் தத்துவம் என்ன?

கோபுர வாயில்கள் பொதுவாக ஒற்றைப்படையில் அமைந்திருக்கும். மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதி

அழுக்கு நிறைந்த மனதை தெய்வீக ஒளி கவர்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னொன்று - இங்ஙனம் அதில் அமைந்துள்ள வாயில்கள் ஒன்றன்மேல் ஒன்றாக பெருகிக் கொண்டே போகும். அத்தகைய வாயில்கள் தத்துவத்துக்கு விளக்கமாக அமைந்துள்ளன. மூன்று வாயில்கள் ஜாக்கிரத, சுவப்ன, சுக்ஷுப்தி என்னும் மூன்று அவஸ்தைகளைக் குறிக்கின்றன. ஐந்து வாயில்கள் ஐம்புலன்களைக் குறிப்பிடுகின்றன. இத்துடன் மனம், புத்தி ஆகிய இரண்டையும் சேர்த்துக்கொண்டால் ஏழு வாயில்களின் தத்துவம் விளங்கும். ஒன்பது வாயில்கள் உள்ள இடத்து, சித்தம் - அகங்காரம் என்னும் இரண்டு தத்துவங்கள் மேலும் சேருகின்றன. இங்ஙனம் நம்முடைய உடலை ஒட்டிய தத்துவங்களே கோபுர வாயில்களின் சின்னங்களாக விளங்குகின்றன.

இவ்வளவு இருந்தாலும் ஒரே ஒரு மூல வாயில் வழியாகத்தான் நாம் உள்ளே செல்கிறோம். இதன் மூலம் ஒரு கருத்து புகட்டப்படுகிறது. புறக்காரணங்களும், அகக்காரணங்களும் இத்தனை இருந்தாலும், கடவுளிடம் நாட்டம் கொள்ளும் போது மனம் என்னும் வாசல் வழியாகத்தான் உள்ளே போக வேண்டும் என்ற தத்துவத்தையே அது காட்டுகிறது. மற்றவை எல்லாம் வெளிஉலகை அறிந்து கொள்ளவே பயன்படும். மனத்தை மட்டும்தான் நாம் துணையாகக் கொண்டு, பரம்பொருளிடம் உள்முகமாகப் பயணம் போக வேண்டும் என்பதை இராஜகோபுரம் வழியாகப் பிரவேசிக்க வேண்டும் என்பது காட்டுகிறது.

## துவஜஸ்தம்பமும் வாகனமும்

இராஜகோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றதும் நம்முடைய கண்ணிற்படுவது பலிபீடம். அதன் அருகில் விழுந்து வணங்க வேண்டும்; அப்படி வணங்கும் போது நம்முடைய மனத்தில் தோன்றும் எண்ணமே முக்கியமானது. கீழ்மையான எண்ணங்களும், கீழான இயல்புகளும் அந்த இடத்தில் பலி கொடுக்கப்பட வேண்டும்; அங்கே கீழே விழுந்துவிட வேண்டும். எழுந்திருக்கும்போது, மேலான எண்ணங்களே மிஞ்சி இருக்கின்றன என்ற நினைவுடன் மேலே எழவேண்டும். இப்படிப் புதியதாக வருவித்துக் கொள்ளும் எண்ணத்தைத் தெய்வசந்நிதியில் தெய்வத்துக்கு உரியதாக மாற்றிவிட வேண்டும்.

அடுத்த படியில் இருக்கும் துவஜஸ்தம்பம் உள்முகமாகத் திரும்பிக்கொண்டு இருக்கிறது. கொடி உள்முகமாகத் திரும்பிக் கொண்டிருக்கிறது. கோயிலைச் சுற்றி நடக்கும்போது பக்தன், உள்ளிருக்கும் தெய்வம் தனது வலப்புறம் இருக்கும்படி பார்த்துக் கொள்கிறான். இதையே நாம் வலம் வருதல் என்கிறோம். இப்படி வலம் வரும்போது கீழான எண்ணங்கள் பின் தங்கிவிடுகின்றன. மேலான எண்ணங்களே முன்கொண்டு செல்லுகின்றன.

துவஜஸ்தம்பத்துக்கு அடுத்தபடியாக இருப்பது தெய்வத்துக்கு உரிய வாகனம். சிவபெருமானுக்கு நந்தி வாகனம் மகாவிஷ்ணுவுக்கு கருட வாகனம். அம்பிகைக்கு சிம்ம வாகனம். இவை தெய்வஉருவை நோக்கி அமைந்திருக்கின்றன. வாகனம் எதுவாயினும் அது ஜீவாத்மாவையே குறிக்கிறது. ஜீவாத்மா பரமாத்மாவையே நோக்கி நாடுவதையே வாகனம் கடவுளைப் பார்த்த வண்ணம் இருப்பது காட்டுகிறது. பரமாத்மா ஜீவாத்மாவை அடக்கி அதன் பகுதியாக இறுதியில் இடம்பெறுகிறது. கடவுள் வாகனத்தின்மீது அமருவதும் இதனையே குறிக்கிறது.

பக்தன் கடவுளையும் வாகனத்தையும் சேர்த்தே வழிபட வேண்டும்; குறுக்கே நுழைதல் முறையல்ல. பிறர் வழிபடுவதற்கு நாம் இடைஞ்சலாக இருக்கக்கூடாது. பிறருக்கு இடைஞ்சல் தரும்

உரிமை இல்லாத இடத்தில் உரித்துடன் பேசி விரோதத்தைத் தேடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, நாமே கடவுள் வழிபாட்டுக்குப் புறம்பாகப் போய்விடுகிறோம். பிறர் வழிபட உதவும் பக்தன், தானும் அந்த வழிபாட்டின் நலனைப் பெறுகிறான். பிறருக்குப் பணிவிடை செய்து யாரும் முன்னேறலாம். இக்கோட்பாடு ஆலய வழிபாட்டிலும் அடங்கி இருக்கிறது.

**கர்ப்பக்கிருகம்**

கர்ப்பக்கிருகத்தில் இருள் சூழ்ந்திருப்பது ஏன்? காற்றோட்டமும் வெளிச்சமும் அங்கே கிடைக்க ஆகமவிதி ஏன் இடம் தருவதில்லை? இந்தச் சந்தேகம் நமக்கு எழக்கூடும். இறைவனை நாடி நாம் தியானம் செய்யும்போது, கருவி கரணங்களை ஒடுக்கி மனத்தை உள்முகமாகத் திருப்புகிறோம். அதன் சின்னமாகவே ஆலயத்தின் கர்ப்பக்கிருகம் அமைந்திருக்கிறது. உடலுக்குள் நம்முடைய நெஞ்சத்தில் மற்ற உணர்வுகள் எல்லாவற்றையும் மறந்து, இறைவனைத் தேடிக் கண்டு பிடிக்க முயலும் முனைப்பையே, கர்ப்பக்கிருகத்தில் மூலவிக்கிரகத்தை - உற்று நோக்கிக் கண்டறிய முயலும் செயல் காட்டுகிறது. அதனால் புற உலகிலிருந்து அங்கே காற்றும் வெளிச்சமும் வருவதில்லை.

கர்ப்பக்கிருகத்தின் அருகில் சென்று பக்தன் தரிசனத்துக்காகக் காத்திருக்கிறான். திரை மூடப்பட்டிருக்கிறது, சிறிது நேரத்துக்கெல்லாம் மணி ஓசை கேட்கிறது. இனி விரைவில் தரிசனம் கிட்டும் என்று பக்தன் தெரிந்துகொள்ளுகிறான். திரையை நீக்கி, உள்ளே கற்பூர தரிசனம் காட்டப்படுகிறது. அதன் வெளிச்சத்தில் பக்தன் விக்கிரகத்தைத் தரிசிக்கிறான். அதையே கடவுளின் வடிவமாக உணர்ந்து கன்னத்தில் போட்டுக் கொள்ளுகிறான், இதன் தத்துவம் என்ன?

மனத்தகத்து நிகழ வேண்டிய ஞானக் காட்சியின் புறத் தோற்றமே ஆகும் இது. மனத்தினுட் புத்தியை ஒருமைப்படுத்த முயலும் சாதகன் முதலில் கார்இருளையே காணுகிறான். அவன் அறிய விரும்பும் பரமாத்மாவைக் காணமுடியாமல் அஞ்ஞானத்திரை மறைத்துக் கொண்டிருக்கிறது. ஆயினும், அவன் பிடிவாதமாகத் தனது முயற்சியில் ஈடுபடுகின்றான். படிப்படியாக ஆழ்ந்த தியானத்தில் அவனுடைய மனம் ஒன்றுகிறது.

அப்படி மனத்தை ஒடுக்கி ஈடுபடும் போது அவனுக்கு ஓர் அனுபவம் கிடைக்கும். தனது உள்ளத்தின் உள்ளே அவன் ஓர் இனிய ஓசையைக் கேட்டான். அங்கே ஒளி நடமாடும்; அங்கே இனிய நறுமணம் போன்ற நல்ல உணர்வுகள் மலரும். படிப்படியாக அவனுடைய உணர்வுகள் ஒன்றாகக் குவியும். இறுதியில் ஞானதரிசனம் கிட்டும். இப்படி ஞான ஒளி தரிசனமாகக் கிடைப்பதையே கர்ப்பக்கிருகத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. மணி அடிக்கிறது; திரை விலகுகிறது; தீப தூபங்களை அடுத்து இறை உருவத்தைத் தரிசிக்கிறோம்.

**மனப்பான்மை**

ஆலயத்துக்குள் சென்றால் மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணசுத்தியும் ஏற்படும். ஆலயத்துள் நுழையும்போது மற்றக் கவலைகள் மறைந்து விடுகின்றன. மனம் அமைதி அடைகிறது. பதைபதைப்புக்கோ, வேகமான நடமாட்டத்துக்கோ அங்கே இடமில்லை. ஆகையால் மன உணர்வுகள் மென்மை அடைகின்றன. கோயிலுக்குள் கூச்சலிட்டுப் பேசக்கூடாது. அப்போது திரும்பி வந்ததும் அமைதியாக உட்கார்ந்து தியானம் செய்வதற்குரிய உள்ளப்பாங்கும் உண்டாகும். வழிபடுபவன் அமைதியுற்று அமர்ந்திருப்பானாகில், அந்த உயர்ந்த எண்ணங்கள் அவனது மனத்துள் பிரதிபலிக்கும். அதுவே ஆலய வழிபாட்டினின்று வழிபடுபவன் பெறுகின்ற பெரிய பேறு ஆகும். இத்தகைய மனப்பான்மையுடன் எத்தனை பேர் ஆலயத்துக்குள் வந்து வணங்குகிறார்களோ, அதற்கேற்ப ஆலயத்துக்குள்ளும் ஏற்கெனவே அமைந்துள்ள அருள் பன்மடங்கு பெரிதாகின்றது. அதனால் ஊரும், நாடும் ஒப்பற்ற உயர்வை எய்துகிறது.

(சுவாமி சித்பவானந்தரின் 'கடவுள் வடிவங்கள்' என்ற நூலிலிருந்து.)

அடிமைகள் வாழ்ந்தாலும் நலன் பெறுவதற்கு எதுவுமே இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனத்தூய்மை!

சித்த சுத்திக்குப் பயன்படுகிற சின்னச் சின்ன விஷயங்கள் பல உண்டு. இந்தச் சின்னச் சின்ன தர்மங்களை நம்முடைய பெரியவர்கள் தலைமுறை தத்துவமாக அநுசரித்து வந்தார்கள். அவர்கள் வாழ்க்கையில் திருப்தியும் சந்தோசமும் நிறைந்திருந்தன. அவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்று பார்த்து, அதை நாம் பின்பற்றினாலே போதும். புதிதாக ஒரு கொள்கையும் வேண்டாம். நாமும் சந்தோஷமாக, திருப்தியாக இருக்கலாம்.

பெரிய அத்யாத்ம விஷயங்களில் மட்டுமில்லாமல், ஒரு சமுதாயத்தில், ஒரு குடும்பத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறைகளில்கூட, நமக்கு முன் வாழ்ந்த பெரியவர்கள் அற்புதமாக வழி காட்டியிருக்கிறார்கள். உதாரணமாக உறவு, சிநேகிதம் எல்லாம் அந்த நாளில் வெகு உயர்ந்த முறையில் காப்பாற்றப்பட்டன. ஒரு கலியாணம், அல்லது அபரகாரியம் (இறுதிச் சடங்கு) என்றால் பலர் ஒன்று சேர்ந்து செலவுசெய்து நடத்திக்கொடுப்பது என்று வைத்துக் கொண்டிருந்தார்களே, அது எவ்வளவு உயர்ந்த பண்பு?

இந்தக் காலத்தில் நடப்பதுபோல் 'டெமான்ஸ்ட்ரேஷ' னும், வெளிவேஷமும் அப்போது இல்லை, ஆனால் அந்த நாளில்தான் ஏழைகளுக்கு உண்மையாக உதவி செய்கிற மனப்பான்மை சுபாவமாகக் காரியத்தில் அநுசரிக்கப்பட்டது. ஒரு கலியாணத்துக்குப் போகிறவர்கள் தங்களால் முடிந்ததை, ஐந்தோ, பத்தோ உதவி செய்வது என்பதால் கலியாணம் செய்பவருக்கு எத்தனையோ பாரம் குறைந்தது.

ஒரு கூட்டத்திலே பலர் கொஞ்சம் கொஞ்சம் கொடுத்தாலும் போதும். கொடுக்கிறவர்களுக்குப் பெரிய சிரமம் ஏதும் இல்லை. ஆனால் வாங்குகிறவனுக்கு மொத்தத்தில் கணிசமாகக் கிடைக்கும். இப்படித்தான் ஓர் ஏழைக்குக் கஷ்டம், அவன் ஒரு கலியாணம் செய்ய வேண்டும் அல்லது அபர காரியம் செய்ய வேண்டும் என்றால் மற்றவர்கள் எல்லாரும் கொஞ்சம் கொஞ்சம் உதவி செய்து அந்தக் காரியத்தை நடத்திக் கொடுத்துவந்தார்கள். முன்னாட்களில் பந்துக்களுக்குள் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் அதிகம் இல்லை. பணக்காரனாக இருப்பவன் ஏழையான பந்துவுக்கே அதிக உதவி செய்வான். இதெல்லாம் தர்மத்தைச் சேர்ந்தது. சிரமத்தில் உள்ளவர்களுக்கு உதவி செய்வது, உதவியைப் பெறுகிறவனைவிட உதவி செய்கிறவனின் சித்த சுத்திக்கே அதிகம் உதவும்.

ஆனால் இன்று எல்லம் மாறிவிட்டது. பழைய கால பந்துத்துவம் பணக்காரர்களுக்கு இல்லை. ஏழையான உறவினர்களுக்கு உதவுகிற மனப்பான்மை குறைந்துவிட்டது. பழைய காலத்தில் நடந்தது உண்மையான அன்னதானம். இப்போது மனிதர்கள் தங்களைப் போன்ற பணக்காரர்களுக்காகவே பார்ட்டி - ஃபீஸ்ட்டு வைக்கிறார்கள். தேசத்தில் ஏராளமாக இப்படி பணமும் பண்டமும் செலவாகின்றன. இதில் தர்மத்துக்கோ, சித்த சுத்திக்கோ எதுவுமே இல்லை. இவன் காரியார்த்தமாகத்தான் ஒருத்தனைக் கூப்பிட்டு பார்ட்டியும் ஃபீஸ்ட்டும் வைக்கிறான். பார்ட்டிகொடுத்து, இதில் சாப்பிட்டவர்களை ஏமாற்றிவிட்டதாக நினைக்கிறான். பார்ட்டி சாப்பிட்டவனுக்கும் தெரியும், 'இவன் பிரியத்தின் பேரில் தனக்குச் சாப்பாடு போடவில்லை' காரியத்துக்காகத்தான் சாப்பாடு போட்டான்' என்று. ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் சந்தோஷமாகச் சாப்பிட்டு விட்டுப் போகிறான். ஆகையால், இவன் அவனை ஏமாற்றுகிறான் என்றால் அவனோ, இவன் போட்டதைச் சாப்பிட்டு

---

தமக்கும் சமுதாயத்திற்கும் உபத்திரவம் இல்லாமல் வாழப்பழக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு இவனையே ஏமாற்றிப் போகிறான். ஆக ஃபீஸ்டும் டோஸ்டும் ஏமாற்று வித்தை யாகவே ஆகின்றனவேயன்றி சித்த சுத்திக் குப் பயன்படவில்லை.

ஏழைக்கு அன்னதானமோ பொருள் உதவியோ செய்யும்போது இரண்டு பக்கத் திலும் உண்மையான சந்தோஷமும் பிரிய முமே நிரம்பியிருந்தன. இப்போது பார்ட்டி நடத்தும் போது அங்கே உண்மை யான பிரியம் இல்லாததோடு, துவேஷம் வேறு உண்டாகிறது. வசதியிருப்பவர்கள் பார்ட்டி நடத்துவதைப் பார்த்து, வசதி யில்லாதவர்களுக்கு வெறுப்பும் துவேஷ மும் உண்டாகின்றன. உறவு முறைகளில் ஏழை பணக்காரர் என்று வித்தியாசம் பாராட்டக் கூடாது என்பதற்காக இவ் வளவு சொன்னேன்.

'வசதியுள்ளவர்கள்தான் பண உதவி செய்து புண்ணியம் சம்பாதிக்க முடியும்; நாம் என்ன செய்யலாம்?'' என்று மற்ற வர்கள் எண்ணக் கூடாது. சரீரத்தால் மற்றவர்களுக்குக் கைங்கரியம் செய்வது பெரிய புண்ணியம். அது சித்த சுத்திக்கு ரொம்ப ரொம்ப உதவும்; வசதியே இல் லாதவர்களும் இவ் விதத்தில் பிறருக்கு சரீர சகாயம் செய்யமுடியும்.

ஒவ்வொருத்தரும் - பிறருக்குக் கூடத் தெரியவேண்டாம் ஏதோ ஓர் ஒற்றையடிப் பாதைக்குப்போய் அங்கே உள்ள முள்ளை, கண்ணாடியை அப்புறப்படுத்தி வந்தால் போதும். அது சித்த சுத்திக்குப் பெரிய உதவி; இது மாதிரிச் சின்ன தர்மங்களை எவரும் செய்யலாம். பணக்காரர், ஏழை என்ற வித்தியாசமில்லாமல் ஒரு பேட்டை யில் உள்ள அனைவரும் சேர்ந்து குளம் வெட்டலாம்.

'ஈசுவர அநுக்கிரகம் வேண்டும், வேண்டும்' என்றால் அது எப்படி வரும்? பரோபகாரமான, ஜீவகாருண்யமுள்ள நல்ல காரியங்களைச் செய்து செய்து மனசு பக்குவப்பட்டால் தான், சித்த சுத்தி உண்டாகி, அந்த சுத்தமான சித்தத்தில் ஈசுவரனின் உருவத்தைப் பார்க்க முடியும். கலங்கின ஜலத்தில் பிம்பம் தெரியாதது போல், நாம் மனசைக் கலக்கிக்கொண்டு ஈசுவரஸ்வரூபம் தெரியாதபடி செய்து கொண்டிருக்கிறோம். பகவத் பக்தியோடு பரோபகாரமும் செய்து, மனசு தெளி வாகும் போது ஈசுவர ஸ்வரூபத்தை நாம் கிரகித்துக்கொண்டு, அவனுடைய அநுக் கிரஹத்தைப் பெற முடியும்.

காஞ்சிப் பெரியவர்
**ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள்**
நன்றி - தெய்வத்தின் குரல் பாகம் 1

## அக்கிரகாரம்

அக்கிரகாரம் என்பது பார்ப்பனர் வாழும் பகுதி. இது பார்ப்பனருக்குக் கொடையாக வழங்கப்பெற்ற பகுதி என்று பொருள்படும். வேள்விகளைச் செய்த பார்ப்பனருக்குக் கொடை யாகக் கொடுக்கப்பட்ட நிலங்களி லிருந்து அக்கிரகாரம் தோன்றியிருக் கலாம். வேதங்களைக் கற்றுத் தெளிந்த அறிஞர்களாகவும், ஆன்மீக வழிகாட்டிகளாகவும் பார்ப்பனர் இருந்திருக்க வேண்டும். அவர்தம் பணிக்காகக் கொடுக்கப்பெற்ற ஊர்கள் அக்கிரகாரம் எனப்பட்டன. அத்தகைய நிலங்களைக் கௌடில்யர் பிரமதேய நிலங்கள் என்று குறிப்பிடு கிறார். இவற்றை இறையிலி நிலம் என்றும் கூறலாம். கொடையாகப் பெறுகிறவர் தம்மைப் பேணிக் காத் துக்கொள்ளுதற்குப் போதுமான உணவுப்பொருளை இந்நிலத்திலிருந்து பெறுவர். அவர் வரி செலுத்தவேண் டியதில்லை. மேலும், பார்ப்பனர்க்கு அன்பளிப்பு, நன்கொடைகள், அறப் பணிகளின் பொருட்டு வழங்கப் பெற்ற நிலங்கள் ஆகியனவும் அக்கிர காரம் என்ற சொல்லாலேயே குறிப் பிடப்பட்டுள்ளன.

**– வாழ்வியற்களஞ்சியம் –**

**உன் குற்றம் மற்றவர் குற்றமாவதில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(16ம் பக்கத் தொடர்ச்சி......)

நெறிப் பாடசாலை ஆசிரியை செல்வி வே. அம்பிகா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

திணைக்களத்தின் சார்பில் உதவிப் பணிப்பாளர்கள் திரு. வீ. விக்கிரமராஜா, திரு. குமார் வடிவேல் இருவரும் கலந்து சிறப்பித்தனர்.

## கேகாலை

கேகாலை மாவட்டப் பரிசளிப்பு வைபவம், மே மாதம் 25ம் திகதி தெஹி யோவிட்ட மாஹின்கந்த பாடசாலை மண்டபத்தில், இளந் தென்றல் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் திரு. எஸ். இரவிச் சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திணைக்களத்தின் சார்பில் உதவிப் பணிப்பாளர்கள் வீ. விக்கிரமராஜா, திரு. குமார் வடிவேல், ஆகியோர் கலந்து கொண்டனர். பிரதேச பிரமுகர்கள் பொது மக்களும் கலந்து வைபவத்தை சிறப்பித்தனர்.

## அம்பாறை

அம்பாறை மாவட்டப் பரிசளிப்பு விழா ஜுன் மாதம் 5ம் திகதி காலை தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. அம்பாறை மாவட்ட கலாசார அலுவலர் திரு. எஸ். தியாகராஜா அவர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார்.

திருநாவுக்கரசு நாயனார் குருகுலம், அக்கரைப்பற்றுத் தொகுதி இந்து மாமன்றம் என்பனவற்றின் அநுசரணையோடு விழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை

திருமலை மாவட்டப் பரிசளிப்பு வைபவம், ஜுன் மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக் கிழமை திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் மகேஸ்வரி மண்டபத்தில் பேரவைச் செயலாளர் திரு. செ. சிவபாத சுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திணைக்களத்தின் சார்பில் உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள், பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

## கண்டி

கண்டி மாவட்டப் பரிசளிப்புவிழா ஜுன் மாதம் 12ம் திகதி, கண்டி இந்து இளைஞர் மன்றத்தின் அநுசரணையுடன் இந்து சிரேஷ்ட பாடசாலை மண்டபத்தில் மன்றத் தலைவர் இறைபணிச்செம்மல் பெ. இராமநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திணைக்களத்தின் சார்பில் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், உதவிப் பணிப்பாளர் திரு. குமார்வடிவேல் ஆகியோர் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர்.

## வவுனியா

வவுனியா மாவட்டப் பரிசளிப்புவிழா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத்தின் அநுசரணையுடன் ஜுன் மாதம் 22ம் திகதி சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா பிரதேச செயலாளர் திரு. சொ. அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திணைக்களத்தின் சார்பில் சிறப்பு விருந்தினர்களாக உதவிப்பணிப்பாளர்கள் திரு. வீ. விக்கிரமராஜா, திரு. குமார்வடிவேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி ஜெ. தெய்வேந்திரன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

## கருத்தரங்கு

திணைக்களத்தின் தமிழ் அலுவல்கள் பிரிவு ஏற்பாடு செய்திருந்த ''தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மொழிகளில் மரபும் புத்தாக்கமும்'' எனுந்தலைப்பிலான கருத்தரங்கொன்று ஜூன் மாதம் 25ம் திகதி திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கொழும்பு பல்கலைக்கழக சிங்களத் துறைத் தலைவர் பேராசிரியர் ஜே. பி. திசாநாயக்க ''சிங்கள மொழியின் மரபும் புத்தாக்கமும்'' எனுந் தலைப்பிலும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக சிங்களத் துறைப் பேராசிரியர் ஏ. வி. சுரவீர ''சிங்களப் படைப்பிலக்கியத்தில் பேச்சுமொழியின் பிரயோகம்'' எனுந் தலைப்பிலும் பேராதனைப் பல்கலைக்கழக சிங்களத் துறைத் தலைவர் பேராசிரியர் கே. என். ஓ. தர்மதாஸ, ''மொழித்தூய்மை வாதம்–சில சிந்தனைகள்'' எனுந் தலைப்பிலும் ஆய்வுரைகள் நிகழ்த்தினர்.

## இலக்கியச் சொற்பொழிவுகள்

திணைக்களத்தின் தமிழ்ப்பிரிவு ஏற்பாடு செய்திருந்த இரண்டு இலக்கிய உரைகள் ஜூன் மாதம் 24ம் திகதி மாலை திணைக்களக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு அண்ணா கலைக்கல்லூரி பேராசிரியர் மு. சாய்பு மரைக்கார் ''இலக்கியத்தில் ஒருமைப்பாடு'' எனுந் தலைப்பிலும், அவரது துணைவியார், பேராசிரியை நசீமாபானு ''கவிமணியின் கவித்திறன்'' எனுந் தலைப்பிலும் இலக்கிய உரைகள் நிகழ்த்தினர்.

இஸ்லாமிய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர் அவர்களும் இவ்வைபவத்திற் கலந்துகொண்டனர்.

உதவிப்பணிப்பாளர் திரு. ஏ. எம். நஹியா அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

### அகப்பேய்ச் சித்தர்

அகப்பேய்ச் சித்தர் பதினெண் சித்தர்களுள் ஒருவராவர்; வேளாளர் குலத்தில் தோன்றியவர். தமது மனம், பேய் போன்று ஒரு நிலைப்படாது அலைதலினால், அதனையே பேயாக உருவகித்து 'அலையாது நிற்க' என்று அறிவுரை கூறிப் பாடியுள்ளார். இவருடைய பாடல் 90 கண்ணிகள் கொண்டது. அதன் ஒவ்வொரு கண்ணியிலும் 'அகப்பேய்' என்னும் சொல்விளியாக இடம் பெற்றுள்ளது. இச் சிறப்பினாலேயே இவர் அகப்பேய்ச் சித்தர் என அழைக்கப் பெற்றார். சங்க காலத்தில், குப்பைக் கோழியார், தொடித்தலை விழுத்தண்டினார், செம்புலப் பெயல் நீரார் போன்றோர் தாம் பாடிய பாடலில் அமைந்த தொடர் காரணமாகப் பெயர் பெற்றவராவர். இவரும் தாம் பாடிய பாடலிலமைந்த அகப்பேய் என்னும் தொடர் காரணமாக அகப்பேய்ச் சித்தர் என்னும் பெயர் பெற்றுள்ளார். இவரது இயற் பெயர் தெரியவில்லை, இவர் பாடல் ஏனைய சித்தர் பாடல்களைப் போலவே மறைபொருட் சொற்களைக் கொண்டுள்ளது. இவரது பாடல் சித்தர் ஞானக் கோவை என்னும் சித்தர் நூற்றொகுப்பில் இடம் பெற்றுள்ளது. தன்னை அறியும் அறிவே மெய்யானது என்றும், பின்னை அறிவதெல்லாம் பேயறிவென்றும் கருதும் தம் கருத்தினைத் 'தன்னையறியவேணும் அகப்பேய், சாராமற் சாரவேணும், பின்னை அறிவதெல்லாம் அகப்பேய் பேயறிவாகுமடி' என்று சாடியுள்ளார் இவர். 'தானற நின்றவிடமே சைவம்' என்று கூறுகின்றார்.

வாழ்வியற் களஞ்சியம் - 1

பண்பாடு என்பது தர்மநெறியிலிருந்து புடம்பண்ணி எடுத்த நல்லதோர் பழக்கவழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# < அங்கும் இங்கும் >

### அறநெறிப்பாடசாலை ஆசிரியர் கருத்தரங்கு

திணைக்களத்தின் அநுசரணையோடு கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் கொழும்பு மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான முழுநாள் கருத்தரங்கொன்றினை ஏப்ரல் மாதம் 30ம் திகதி சங்கத்தின் நால்வர் மணி மண்டபத்தில் நடத்தியது.

சங்கத்தலைவர் திரு. சி. தனபாலா ஜே. பி. அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பயிற்சியிற் பங்குபற்றியோருக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

திணைக்களத்தின் சார்பில், பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் கலாசார உத்தியோகத்தர் செல்வி எம். இராஜேஸ்வரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கருத்தரங்கில், ''தியானப்பயிற்சி'' எனுந்தலைப்பில் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களும், ''கற்பித்தல் முறைகள்'' எனுந்தலைப்பில் திருமதி பூமணி குலசிங்கம் அவர்களும் ''கதைகள் மூலம் அறநெறிக்கருத்துக்கள்'' எனுந் தலைப்பில் திருமதி என். வேதநாயகம் அவர்களும் ''கோயில் வழிபாடும், அதன் முக்கியத்துவமும்'' எனுந்தலைப்பில் திரு. வ. சிவராஜசிங்கம் அவர்களும், ''பக்தி மார்க்கமும் பண்ணிசையும்'' எனுந்தலைப்பில் திருமதி ம.கைலாசநாதன் அவர்களும், ''இந்துசமய வாழ்வும் அதன் விழுமியங்களும்'' எனுந்தலைப்பில் திரு. கு. சோமசுந்தரம் அவர்களும், ''விழாக்களும் விரதங்களும்'' எனுந்தலைப்பில் திரு. கு. குருசுவாமி அவர்களும் உரை நிகழ்த்தினர்.

திருமதி சாந்தி நாவுக்கரசன் அறநெறிப் பாடசாலைகளின் செயற்திட்டங்கள் பற்றி விளக்கினார்.

சைவ முன்னேற்றச் சங்க அறநெறிப் பாடசாலைச் செயலாளர் திரு. கு. நாகேந்திரன் அவர்களின் நன்றியுரையுடன் வைபவம் நிறைவுபெற்றது.

### காரைதீவு சாரதா மகளிர் இல்லம்

காரைதீவு ஸ்ரீ இராமகிருஷ்ண மிசன் சாரதா மகளிர் இல்லம் மே மாதம் 27ம் திகதி திறந்துவைக்கப்பட்டது. அகில உலக இராமகிருஷ்ண மிசன் பொதுக் காரியதரிசி ஸ்ரீமத் சுவாமி ஆத்மஸ்தாநந்தா அவர்கள் கலந்து கொண்டு வைபவரீதியாக இல்லத்தைத் திறந்துவைத்தார்.

காரைதீவு வந்த சுவாமிஜி அவர்களுக்கு பிரதேச மக்களால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது: சுவாமியுடன், இலங்கைக் கிளையின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா, மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிசன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவானந்தா, கல்கத்தா ''உத்போதன்'' இதழின் ஆசிரியர் சுவாமி பூரணானந்தா, மட்டக்களப்பு மேயர் செழியன் ஜே. பேரின்பநாயகம், ஆகியோரும் வரவேற்பில் கலந்துகொண்டனர்.

சுவாமிகளை வரவேற்பதற்கென காரைதீவு கிராமமே விழாக்கோலம் பூண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பண்பாடு

திணைக்களத்தின் ஆய்வு இதழான பண்பாடு 94 வைகாசி இதழ் வெளி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளது. இவ்விதழில் எம். நுஃமானின் ''நாட்டார் இலக்கியத்தில் காதற் பாடல்கள்'', சி. பத்மநாதனின் ''தட்சிண கைலாச புராணம் ஓர் ஆய்வு'' சுரேஷ் கனகராசாவின் தமிழ் இலக்கிய விமரிசனம் ஓர் மதிப்பீடு'', பெ. சு. மணியின் சுதேச மித்திரனில் பாரதியார், ஆகிய கட்டுரை களும் மேலும் பல தகவல்களும் இடம் பெற்றுள்ளன. பண்பாடு தனிப்பிரதியின் விலை ரூ. 25/- ஆகும். இவ்விதழை, திணைக்களத்தின் கருமபீடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### விவேகானந்த சபையின் சைவசமயப் பரீட்சை

கொழும்பு விவேகானந்த சபை அகில இலங்கை ரீதியாக நடத்தும் சைவசமய பாடப் பரீட்சை நவம்பர் மாதம் 6ம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை தொடர்பான விபரங் களை கௌரவ பொதுச் செயலாளர், விவேகானந்த சபை 34, விவேகானந்த மேடு, கொழும்பு - 13. என்ற விலாசத் திற்கு எழுதிப் பெறலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

### பாரீஸ் சைவத்தமிழ் மாநாடு

உலக சைவப் பேரவையின் மூன்றா வது சைவத் தமிழ் மாநாடு பாரீஸ் நகர் ஸ்ரீ சித்திவிநாயர் ஆலய மண்டபத்தில் இம் மாதம் 25, 26ம் திகதிகளில் (ஜூன்) நடைபெற உள்ளது.

இம் மாநாட்டுக்கு இலங்கை ஆலோ சனை சபையின் பிரதிநிதிகளாக, உலக சைவ பேரவையின் இலங்கை கிளைத் தலை வரும் இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சின் செயலாளருமான திரு. கா. தயாபரன் அவர்களும் கிளையின் உபதலை வர்களான இந்துசமய திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், அவர்களும் கலந்து கொள்கின்றனர்.

இம் மாநாட்டிற்கு பிரான்ஸ், இங்கி லாந்து, தமிழ்நாடு, மலேசியா, தென் ஆபிரிக்கா, சிங்கப்பூர், மொரிசியஸ் உட் பட பல நாடுகளையும் சேர்ந்த அறிஞர் பெருமக்கள் ஒன்று கூடுகின்றனர். மாநாட் டிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் உலக சைவ பேரவையின் பாரீஸ் கிளை யும், பாரீசில் இருந்து வெளியாகும் ''தமிழன்'' பத்திரிகை நிறுவனமும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

உலக சைவப் பேரவையின் தலைவராக திருபனந்தாள் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமி தம்பி ரான் சுவாமிகளும், பொதுச் செயலாள ராக லண்டன் மெய்கண்டான் ஆதீன முதல்வர் தவத்திரு சுவாமி சிவநந்தி அடி களாரும் விளங்குகின்றனர்.

மாநாட்டினை ஒட்டி சைவத்தமிழ் கருத்தமைந்த பேச்சு, கட்டுரை, திருமுறை ஓதுதல் ஆகிய போட்டிகள் உலகளாவிய ரீதியில் இடம் பெற்றுள்ளன. மாநாடு தொடர்பாக சிறப்பு மலர் ஒன்றும் வெளி யிட்டு வைக்கப்பட உள்ளது.

கொழும்பில் இயங்கும் உலக சைவப் பேரவையின் இலங்கை கிளையின் தலைவ ராக திரு. கா. தயாபரன் அவர்களும் செயலாளராக ''இந்து கலாசாரம்'' இதழின் ஆசிரியர் திரு. ஏ. எம். துரை சாமி அவர்களும் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### கனடா சைவ சித்தாந்த மாநாடு

கனடா இந்து கவுன்சில், கனடாவில் உள்ள ஏனைய இந்துசமய நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்கின்ற நான்காவது சர்வதேச சைவ சித்தாந்த மகாநாடு

தேனில் ஊறும் பலாச்சுளை போல இறைசிந்தனையில் ஊறும் மனமும் கெட்டுவிடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை மாதம் 1ம் திகதி முதல் 10ம் திகதி வரை மொன்ட்றில், டொரன்டோ நகரில் நடைபெறுகின்றது.

இம்மாநாட்டின் ஏற்பாட்டாளர்கள் இந்துசமய கலாசார இராஜாங்க அமைச் ஊடாக விடுத்திருந்த கோரிக்கைக்கு இணங்க நான்கு இலங்கை அறிஞர்கள் இம்மாநாட்டின் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்கின்றனர்.

தமிழ்நாடு தருமபுரம் சர்வதேச சைவ சித்தாந்த ஆய்வு மையத்தின் அனுசரணை யோடு நான்காவது மகாநாடு ஒழுங்கு செய்யப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் வாழுகின்ற சைவமக்களின் தத்துவமான சைவ சித்தாந் தம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள் வதே மாநாட்டின் பிரதான நோக்கமாகும்.

கனடா இந்து கவுன்சில், கனடா இந்து ஆலய சங்கம், நிர்வாண கலாசார சங்கம், கியுபெக் சைவ மிஷன் என்பன இணைந்து மாநாட்டிற்கான ஒழுங்குகளை மேற்கொள கின்றன. ஆங்கிலம், தமிழ், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் மாநாட்டு அமர்வுகள் இடம்பெற உள்ளன.

மாநாட்டிற்கென இந்தியா, இலங்கை மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ், இந்தோனேசியா, தாய்லாந்து. நேபாளம், இங்கிலாந்து, அமெரிக்கா உட்பட பலநாடு களில் இருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது

## கோமல் சுவாமிநாதன் விஜயம்

பிரபல நாடகக் கலைஞரும் 'சுபமங் களா' இதழின் ஆசிரியருமான கோமல் சுவாமிநாதன் மார்ச் மாதம் இலங்கை தேசிய கலை இலக்கியப்பேரவையின் அழைப்பின் பேரில் இலங்கை வந்திருந் தார்.

இலங்கையில் இரண்டு வாரங்கள் தங்கியிருந்த காலத்தில் கொழும்பு, மட் டக்களப்பு, யாழ்ப்பாணம், மாத்தளை, ஹட்டன், கண்டி, திருகோணமலை, இராகலை, நாவலப்பிட்டி ஆகிய பல இடங்களிலும் அவரது சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

> மண்ணுலக வாழ்வையோ, விண் ணுலக வாழ்வையோ நாடாதே; வாழ இச்சையுறுவதே மயக்கமாம். வாழ்வு அநித்தியமானது என்பதை உணர்ந்து, அறியாமைக் கனவினின் றும் விழித்தெழு; மரணம் உன்னைப் பற்றுமுன் ஞானத்தையும் முத்தியை யும் அடைய முயல்வாயாக.
>
> – பகவான் கிருஷ்ணர் –

## புலவர் இ. பெரியதம்பிப்பிள்ளை முத்திரை வெளியீடு

கிழக்கிலங்கையின் தமிழறிஞரான புலவர் மணி இ. பெரியதம்பிள்ளை அவர் களின் ஞாபகார்த்த முத்திரையொன்று மேமாதம் 22ம் திகதி தேசியவீரர்கள் தினத்தன்று இலங்கை தபால் திணைக் களத்தினால் வெளியிட்டுவைக்கப்பட்டது.

1899ம் ஆண்டு மட்டுநகர், மண்டூரில் பிறந்த பெரியதம்பிப்பிள்ளை, மிகச்சிறந்த தமிழறிஞர்களிடம் கல்விபயின்றார். தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் எழுதிய தமிழ்ப் பாடல்கள் தமிழ்ப்பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அவரது ''பகவத் கீதை வெண்பா'' எனும் நூல் சாகித்திய மண்டலப் பரிசுபெற்றது.

1951ம் ஆண்டு மட்டக்களப்பு தமிழ்க் கலைமன்றம் 'புலவர் மணி' எனும் பட்ட மளித்து கௌரவித்தது. அரசகரும

சமயமென்பது கடைந்தெடுத்த வாழ்க்கைத்திட்டத்தின் பெட்டகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகள் ஆலோசனைச் சபை, இலங்கை வானொலி கல்விச் சேவை ஆலோசனைச் சபை என்பவற்றில் உயர்பதவிகளை வகித்த புலவர்மணி அவர்கள் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி அமரரானார்.

## 'அகிலம்' வெளியீடு

கண்டி கலை இலக்கிய ரசிகர் மன்றத்தின் அங்குரார்ப்பணமும் 'அகிலம்' என்ற சஞ்சிகையின் வெளியீடும் ஜூன் மாதம் 5ம் திகதி கண்டி இந்து கலாசார நிலையத்தில் நடைபெற்றன.

இதழாசிரியர் திரு. கே. வி. இராமசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அசோகா வித்தியாலய அதிபர் திரு. செ. நடராசா அவர்கள் நூலின் அறிமுக உரையும், கலாநிதி துரை மனோகரன் அவர்கள் விமரிசன உரையும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து, இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், கலாகீர்த்தி, பேராசிரியர் எஸ். தில்லைநாதன், தொழிலதிபர் எஸ். முத்தையா, சமூக சேவையாளர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஆற்றும் கலை, சமூகப் பணிகளுக்காக வாழ்த்தி கௌரவிக்கப்பட்டனர். விழாவின் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன தமிழ்ப் பிரிவுப் பணிப்பாளர் திரு. எஸ். விஸ்வநாதன், செல்வி. கவிதா தில்லைநாதன் ஆகியோர் நிகழ்ச்சியைத் தொகுத்தளித்தனர்.

## மதங்கள் பற்றிய சிறப்புரைகள்

''மதங்களின் பாராளுமன்றம்'' எனும் பொருளில் மே மாதம் 29ம் திகதி மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் சிறப்புரைகள் இடம்பெற்றன.

இந்நிகழ்ச்சியில் இராமகிருஷ்ண மிஷனின் அகில உலக பொதுச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மஸ்தானந்தாஜி மஹராஜ், கொழும்பு வஜிராராம பியதஸ்ஸி நாயக்க தேரர், சமய சமூக நிறுவனப் பணிப்பாளர் திரு. திஸ்ஸ பாலசூரிய, கல்கத்தா 'உத்போதன்' இதழின் ஆசிரியர் சுவாமி பூர்ணாத்மானந்தாஜி கொழும்பு காதிகள் சபை உறுப்பினர் ஆர். எம். ஸரூக் ஆகியோர் பௌத்த, இந்து கிறிஸ்தவ, இஸ்லாம் மதங்களின் சார்பில் சிறப்புரைகள் நிகழ்த்தினார்.

## கனடாவில் உலகத் தமிழ் மாநாடு

உலகத் தமிழ்ப்பண்பாட்டுக் கழகத்தின் 6ம் மகாநாடு இவ்வருடம் ஆகஸ்ட் 19, 20, 21ம் திகதிகளில் டொரொன்டோ நகரில் நடைபெற உள்ளது.

உலகின் அனைத்துப் பாகங்களிலும் வாழும் தமிழ்மக்களின் பண்பாடு பிரச்சனைகள் என்பவற்றை ஆய்வு செய்யும் முகமாக கூட்டப்படும் இம்மாநாடு இதற்குமுன், தமிழ்நாடு, மலேசியா (இருதடவைகள்) மொறிசியஸ், அவுஸ்ரேலியா ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளது.

மாநாட்டினை ஒட்டி, சிறு கதை, கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டன. அத்துடன் பழந் தமிழ் நூல்கள், தமிழ் ஏடுகள் என்பனவும் மறுபிரசுரம் செய்யப்படவுள்ளன.

தமிழ்ப் பண்பாட்டை கனடா மக்களுக்கு உணர்த்தும் வகையில் அலங்கார ஊர்திகளின் பவனி, பரத நாட்டியம், கும்மி, நடனம் என்பனவும் இடம் பெறவுள்ளன.

தியானத்திலிருந்து பெருஞ் சுகம் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊவா மாகாண தமிழ்சாகித்திய விழா

இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சுடன் இணைந்து ஊவா மாகாண சபையின் கூட்டுறவு இந்துசமய கலா சார அலுவல்கள் அமைச்சு, இரண்டாவது தடவையாக தமிழ் சாகித்திய விழாவை ஜூலை மாதத்தில் சிறப்பாக நடத்த ஏற் பாடுகளை மேற்கொண்டுள்ளது.

விழாவினை ஒட்டி, சிறுகதைப் போட்டி, தமிழ்மன்றங்கள், பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெறும் நாடகப்போட்டி என்பன அறிமுகப்படுத் தப்பட்டுள்ளன.

விழாவின்போது இலக்கியக்கருத்தரங்கு, கவியரங்கு, பிரதேச எழுத்தாளர்களைப் பாராட்டும் வைபவம் என்பன நடைபெற உள்ளன.

## சிவராத்திரி விழா

மகா சிவராத்திரி விழாவை முன் னிட்டு புத்தளம் இந்து இளைஞர் மன் றம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் சிவராத்திரி விழாவை மார்ச் மாதம் 10ம் திகதி சிறப்பாக நடத்தியது.

இவ்வைபவத்திற்கு இந்துசமயத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா அவர்கள் பிரதம அதிதி யாகக் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த் தினார். திருமதி சுலோசனா பாலசுப்பிர மணியம் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சி யும் இடம்பெற்றது.

புத்தளம் பிரதேச தமிழ்ப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. விழாவிற்கான ஏற்பாடுகளை இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு. வீ. சண்முகவேல் செயலாளர் திரு. கனக சபை ஆகியோர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுவாமி விவேகானந்தர் மோட்டார் பவனி

சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ பேருரை நூற்றாண்டினை ஒட்டி கொழும்பு விவேகானந்த சபை ஏற்பாடு செய்திருந்த விவேகானந்தரின் உருவச் சிலை தாங்கிய மோட்டார் பவனி மே மாதம் 29ம் திகதி காலை சபை வாசலிலிருந்து ஆரம்ப மானது.

கொழும்பின் பிரபல வீதிகளூடாக இடம்பெற்ற இப்பவனி அன்று மதிய வேளையில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் வாயிலை வந்தடைந்தது.

கொழும்பின் இந்துசமய அமைப்பு களைச் சார்ந்த உறுப்பினர்கள் பெருந் தொகையானோர் இவ்பவனியிற் கலந்து கொண்டனர்.

இந்துசமய இராஜாங்க அமைச்சு ஏற்பாடு செய்திருந்த இரதபவனி வர

## எட்டாவது தமிழாராய்ச்சி மாநாடு

எட்டாவது அனைத்துலகத் தமி ழாராய்ச்சி மாநாடு 1995ம் ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் 5ம் திகதி வரை தமிழ் நாடு தஞ்சாவூரில் நடை பெறவுள்ளது. இம்மாநாட்டிற் கலந்துகொள்ள எழுபதுக்கும் மேற் பட்ட இலங்கை அறிஞர்கள் அழைக் கப்பட்டுள்ளனர்.

இம் மாநாட்டின் ஆய்வுக் கட்டு ரைகள் படிக்க விரும்புவோர் பேராசி ரியர் டாக்டர் எஸ். இராஜாராம் தலைவர் மொழியியற் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் 613005, தமிழ் நாடு என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

சான்றோர் மனம் புண்பட நடந்தால் அதுவே பிரம்ம சாபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்பு நிகழ்ச்சி காப்புறுதிக் கூட்டுத் தாபன வாயிலில் இடம்பெற்றது. இவ் வைபவத்தில் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அமைச்சின் செயலாளர் திரு. கா. தயாபரன், பணிப்பாளர் திரு, க. சண்முகலிங்கம், உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## அமரத்துவம்

கடந்த ஆண்டு பக்திப்பெருவிழாவில் முறையே ஞானசிரோன்மணி, சிவநெறிச் செம்மல் ஆகிய விருதுகளைப் பெற்ற கு. குருசாமி, ம. திருப்பதியாப்பிள்ளை ஆகியோர் அண்மையில் அமரத்துவமடைந் தனர்.

இம்முறை ஜூன் மாதம் 11ம் திகதி பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற பக்திப்பெருவிழாவில், இவ் விருவருக்கும், வாரியார் சுவாமிகள், அமரர் வி. என். சிவராஜா ஆகியோருக் கும் இரண்டு நிமிட நேரம் மௌன அஞ் சலி செலுத்தப்பட்டது.

## புதிய கட்டிடம்

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் புதிய கட்டிடத்திற்கான கால்கோள் விழா ஜூன் மாதம் 10ம் திகதி காலை தமிழ்ச் சங்க வளவில் நடைபெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் கொழும்பு மாநகர முதல்வர் க. கணேச லிங்கம், மொறீசியஸ் நாட்டின் இலங்கைத் தூதுவர் தெ. ஈஸ்வரன் ஆகியோர் இந் நிகழ்ச்சியிற் கலந்து சிறப்பித்தனர்.

## ஈழம் தந்த நாவலர்

பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் அவர்கள் எழுதிய ''ஈழம் தந்த நாவலர்'' என்ற நூலின் வெளியீடு ஏப்ரல் 10ம் திகதி அகில இலங்கை இந்து மாமன்ற புதிய கட்டிட மண்டபத்தில் நடைபெற் றது.

இவ் வைபவத்திற்கு இராஜாங்க அமை சர் பி. பி. தேவராஜ். பிரதம அதிதியாகச் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். இந்துமாமன்றத்தின் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா தலைமை வகித்தார். முன்னாள் எம். பி. யான திரு. மு. சிவ சிதம்பரம், வீரகேசரி பிரதம ஆசிரியர் திரு. ஆ. சிவநேசச் செல்வன், இந்து மாமன்றச் செயலாளர் திரு. க. நீலகண் டன், வித்துவான் க. ந. வேலன், தேசிய கல்வி நிறுவகப் பிரதிப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம், புலவர் ஈழத்து சிவானந்தன், 'தினகரன்' பிரதம ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதன், கொழும்பு விவேகானந்த சபைத் தலைவர். டாக்டர். க, வேலாயுதபிள்ளை ஆகியோரும் உரை நிகழ்த்தினர். நூலாசிரியர் பொ. பூலோக சிங்கம் அவர்கள் பதிலுரை வழங்கினார்.

## தெமட்டகொடையில் அறநெறிப் பாடசாலை

கொழும்பு தெமட்டக்கொடை விபுலா நந்த மகா வித்தியாலயத்தில் அறநெறிப் பாடசாலை ஒன்று மார்ச் மாதம் 27ம் திகதி புதிதாக ஆரம்பிக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவ ராஜ், கொழும்பு மாநகர முதல்வர் கே. கணேசலிங்கம், மேல்மாகாண சபை உறுப் பினர் திரு. ஆர். யோகராஜன், இராம கிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்ம கனாநந்தா ஆகியோர் இவ்வைபவத்திற் கலந்துகொண்டனர்.

மாளிகாவத்தை இந்துப் பொதுப்பணி மன்றம் இதற்கான ஏற்பாடுகளை மேற் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பக்குவம் அடைந்தோர் மனம், உலகத் துன்பங்களால் கொந்தளிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொல்கஹாவெல அறநெறிப் பாடசாலை

பொல்கஹாவெல ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் அநுசரணையில் நடத்தப்பட்டுவரும் அறநெறிப் பாட சாலை தனது முதலாவது ஆண்டு பூர்த்தியினை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது,

இது தொடர்பான கருத்தரங்கொன்று பொல்கஹாவெலை அல் இர்பான் முஸ்லீம் வித்தியாலய அதிபர் எம். சீ. எம். நஸீர் அவர்கள் தலைமையில் மே மாதத்தில் நடைபெற்றது.

பொல்கஹாவெல ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய குருக்கள் சிவஸ்ரீ கலைச் செல்வன் அவர்கள் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

பிரதேச இந்து மக்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்ட இந் நிகழ்ச்சியில் அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாளர் திரு. ஐ. அழகிரிசாமி அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்.

## பதுளையில் அறநெறிப் பாடசாலை

பதுளை ரொக்ஹில் ஸ்ரீ காளியம்மன் கோயில் பரிபாலனசபையின் அநுசரணையுடன் பதுளை இந்து மகளிர் பேரவையினால் புதிய அறநெறிப்பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. முறையே ஒவ்வொரு ஞாயிறு தினத்திலும் பதுளை சரஸ்வதி கனிஷ்ட பாடசாலையில் இவ்வகுப்புகள் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மஹாபிஷேகம்

பஞ்சாமிர்தம், பால், இளநீர் முதலிய சகல பொருட்களாலும் மூலமூர்த்திக்கு அபிஷேகம் செய்து ஸ்நபனாபிஷேகம் செய்வது மஹாபிஷேகம் எனப்படும். இதன் பின் ஆசார்ய பூஜை நிகழும். சிவாசாரியார்களை உபசரித்து தக்ஷிணை தாம்பூலங்கள் வழங்கி நமஸ்கரித்து அவர்களது ஆசி பெறுவதுடன் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நிறைவுபெறும். இரவு கல்யாண உற்சவம், திருவூஞ்சல் என்பன நிகழும்.

### மண்டலாபிஷேகம்

கும்பாபிஷேகம் நிகழ்ந்த நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் கொண்ட ஒரு மண்டலத்துக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழும். திரிபட்சம் (மூன்று பட்சங்கள் கொண்டது) ஒரு மண்டலம், ஒரு பட்சம் பதினைந்து நாள். எனவே நாற்பத்தைந்து நாட்களே மண்டலாபிஷேகத்திற்கு உரிய காலமாகும்.

### சங்காபிஷேகம்

நாற்பத்தைந்தாம் நாள் சங்காபிஷேகம் நடைபெறும். பூஜைக்குரிய உபகரணங்களுள் சங்கு மிகத் தூய்மையானது. சங்கில் விடப்படும் நீர் புண்ணிய தீர்த்தத்திற்கு நிகராகிறது. நூற்றெட்டுச் சங்கினாலும் (அஷ்டோத்தர சத சங்கம்), ஆயிரத்தெட்டுச் சங்கினாலும் (அஷ்டோத்தர சஹஸ்ர சங்கம்) வசதிக்கேற்பச் சங்காபிஷேகம் நிகழும்.

பிரதான கும்பத்தில் வலம்புரிச் சங்கும் ஏனையவற்றிற்கு இடம்புரிச் சங்கும் உபயோகிக்கப்படும்.

**தெய்வம் உன்னைக் எப்பொழுதும் கைவிடுவதில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இந்துக் கோயில்கள்

இலங்கையின் இந்துக் கோயில்களின் வரலாறுகளைத் தொகுத்து பல பாகங்கள் கொண்ட நூலாக வெளியிடுவதற்கான நடவடிக்கைகளைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இந்நூலின் முதலாவது பாகம் தற்போது அச்சில் உள்ளது. இதில் ஒன்பது ஆலயங்களின் வரலாறுகளும், கஞதேவாலயக் கல்வெட்டு, கோவிற் கல்வெட்டு என்பன பற்றிய விளக்கமும் இடம்பெற்றுள்ளன. சுமார் 200 பக்கங்களையுடைய இந்நூல் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் வெளியிடப்படும்.

நூலின் இரண்டாவது பாகத்தில் கீழ்வரும் ஆலயங்களின் வரலாறுகள் இடம் பெறவுள்ளன

1. திருக்கேதீஸ்வரம்
2. முன்னேஸ்வரம்
3. திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி கோயில்
4. மண்டூர் கந்தசுவாமி கோயில்
5. பழுகாமம் திரௌபதி அம்மன் கோயில்
6. நல்லூர் கயிலாய பிள்ளையார் கோயில்
7. வண்ணார்ப்பண்ணை வைத்தீஸ்வரர் கோயில்
8. இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்
9. வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயில்
10. ஒட்டுச்சுட்டான் தான்தோன்றீயீசுவரர் கோயில்
11. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில்
12. நயினை நாகபூஷணி அம்மன் கோயில்
13. கண்டி கட்டுக்கலை செல்வவிநாயகர் கோயில்
14. கப்பித்தாவத்தை சிவன், பிள்ளையார் கோயில்கள்.
15. சம்மாங்கோடு மாணிக்கவிநாயகர் கோயில்
16. திருகோணமலை சிவன் கோயில்
17. உடப்பு திரௌபதி அம்மன் கோயில்

இக்கோயில்கள் பற்றி எழுத விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கோயில்கள் வரலாறு பற்றிய கட்டுரைகள், பௌராணிக மரபுகள், அரச ஆவணங்கள், இலக்கியக்குறிப்புகள், தொல்பொருட்சின்னங்கள், நடைமுறை வழமைகள், ஏடுகள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆய்வு நோக்கில் எழுதப்பட வேண்டும்.

தல வரலாறு, ஐதீகங்கள், நித்திய, நைமித்திய கருமங்கள், விழாக்கள், வழிபாட்டு முறை, கட்டிட, சிற்ப, ஓவிய அமைப்புகள் போன்றவை விளக்கப்படுதல் வேண்டும்.

திணைக்களம் நியமிக்கும் அறிஞர் குழுவினால் விண்ணப்பதாரரின் தகைமைகள் பரிசீலிக்கப்படும். அத்துடன் அறிஞர் குழுவின் வழிகாட்டலுக்கமைய கட்டுரைகள் எழுதப்படவும் வேண்டும்.

சுய முகவரி எழுதப்பட்ட தபாலுறையினை அனுப்பி மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்க.

பணிப்பாளர்

**இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,**

**9ம் மாடி, 'காப்புறுதி இல்லம்'**

**21, வொக்ஷோல் வீதி, - கொழும்பு - 02.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகம் - விஞ்ஞானம்

சுவாமி சின்மயானந்தர்

மனிதர்கள் ஓய மாட்டார்கள், அறிந்து கொள்ளாத வரைக்கும் அறிந்துகொள்ள வேண்டும்; புரிந்துகொள்ளவேண்டும் என்பது தான் மனிதனை என்றென்றைக்கும் படுத்தி வந்திருக்கும் பசிகளுள் மிகக் கடுமையானது.

வரலாற்றின் - உதயந்தொட்டே இப்படித்தான். மனிதன் அக உலகம், புற உலகம், இவற்றை அறிந்து கொள்ளவும், ஆராயவும், உண்மைகளை மேன் மேலும் கண்டு பிடிக்கவும் விழைந்திருக்கிறான்.

நமது புலன்களால் உணரப்படும் பொருள்களும் உயிர்களும் அடங்கிய புற உலகத்தைப் பற்றிய அறிவுத் தொகுப்பே விஞ்ஞானம்; அகவுலகத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளும், கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகளும் வாழ்க்கைச் சாத்திரமாகத் தொகுக்கப்படும் போது அது தத்துவம் ஆகிறது.

எண்ணிலடங்காத விதம் விதமான பொருள்களையும் பிராணிகளையும் கண்டு பிடித்து ஏற்றமடைந்த விஞ்ஞானம், பொருளின் தன்மை என்ன என்பதை இறுதி வரை பகுத்து ஆராயப் புகுந்தது, பதினெட்டாம் நூற்றாண்டிலே, பருப் பொருளின் மேற்கொண்டு பகுக்க முடியாத பகுதி அணுதான் என்றும், உலகத்திலே தொண்ணூற்றொன்பது வெவ்வேறு தாதுக்கள் இருக்கின்றன என்றும் அறிவித்தார்கள்.

இருபதாம் நூற்றாண்டிலோ, அணுவையும் பகுக்க முடியும் என்றும், இறுதியில் அந்த அணுவுக்குள் இருப்பது சக்தியைத் தவிர வேறல்ல என்றும் கண்டுபிடித்தார்கள். ஆகக் கடைசியில், அணுவின் உள்ளீட்டைப் பற்றிய முடிவான ஆராய்ச்சிப்படி, முன்பு தொண்ணூற்றொன்பதாக இருந்த தாதுக்கள் இப்போது மூன்றே மூன்றாக எலக்ட்ரான், ப்ரோடான், நியூட்ரானாகக் குறுகிவிட்டன.

எவ்வாறு அறிவுத் தாகம் கொண்ட விஞ்ஞானம் புற உலகப் பொருள்களின் இயல்பையும் நடத்தையையும் கண்டுபிடிப்பதில் ஆழ்ந்திருக்கிறதோ, அது போல் அக உலகத்தையும் அதிலுள்ளவற்றின் நடத்தையையும் கண்டுபிடிக்கத் துவக்க முதல்முயன்று வந்திருக்கிறது தத்துவம்.

ஆகவே, தத்துவ ஞானிகள் வெறும் பகல் கனவு காண்பவர்கள் என்றோ, கையாலாகாக் கவிஞர்கள் என்றோ, ஏட்டுச் சுரைக்காய்கள் என்றோ எவன் ஏசினாலும் அவன் தனது அறியாமையையே அம்பலப்படுத்தியவன் ஆகிறான்.

கவைக்குதவாத தத்துவம் என்றும், வாழ்க்கைக்கும் அதற்கும் நேரடித் தொடர்பு இல்லையென்றும் சுமத்தப்படும் குற்றச் சாட்டு ஓரளவுக்கு மேலை நாட்டாருடைய தத்துவத்துக்குப் பொருந்தக் கூடும். ஏனெனில், அவர்களைப் பொறுத்த வரை லட்சிய வாழ்க்கையைப் பற்றிய ஒரு கற்பனை தான் தத்துவம். மேலை நாட்டுத் தத்துவம், பொருத்தமான சூழ்நிலை ஒருகால் வாய்க்க நேர்ந்தால், அப்படி வாய்க்கும் பொழுது வாழ்க்கை முறையே இப்படி இப்படி அமைக்க வேண்டும் என்று ஓவியம் தீட்டுவதோடு திருப்தியுறுகிறது.

வெள்ளைக்காரத்தத்துவ அறிஞர் சோபாவிலே சாய்ந்துகொண்டு, தொலைவிலுள்ள ஒரு படத்தைச் சுட்டிக் காட்டுகிறார். எட்டத்தில் இருக்கும் அந்த லட்சிய வாழ்க்கை மனிதனுக்கு என்றைக்கேனும் கிட்டும், என்ற நம்பிக்கை அவருக்கே இல்லை. அவரது கற்பனையின் கவர்ச்சியைப் பிறர் கண்டு ரசித்தாலே அவருக்கும் போதும். நேர்மாறாக நிற்கின்றன இந்து மத தத்துவத்தின் ஆறு சமயங்களும், இவற்றில் எதுவுமே வெறும் லட்சியத்தை வர்ணிப்பதோடு நின்று விடவில்லை. வாழ்வியல் அம்சங்களையும் பிறவியின் தாத்பரியத்தையும் அவை உணர்த்துகின்றன.

---

பக்கங்களின் அடியிலுள்ள அருள் வசனங்கள் ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா அவர்கள் அருளியவை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பக்திப்பெருவிழாவில் கௌரவம் பெற்ற அருளாளர்களில் ஒரு பகுதியினர், இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், சுவாமி ஆத்மகனாநந்தா ஆகியோருடன் காணப்படுகின்றனர்.



பக்திப்பெருவிழாவில், மட்டக்களப்பு விபுலாநந்த இசைநடனக் கல்லூரி மாணவியர் வழங்கிய கலைநிகழ்ச்சியின் ஒரு காட்சியையும், பார்வையாளர்களில் ஒருபகுதியினரையும் படத்திற் காணலாம்.

**அட்டைப்படம்:**

பேலூர், கேசவ ஆலயத்திலுள்ள கிருஷ்ணனின் வடிவினைக் குறிக்கும் 12ம் நூற்றாண்டுச் சிற்பம்.

(இண்டியன் மைதோலோஜி எனும் நூலிலிருந்து)

படங்கள் உதவி : எஸ். மயூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்குள்ள நூல்கள்

| | | |
|---|---|---|
| தமிழ்நாட்டு வரலாறு<br>சங்ககாலம் - வாழ்வியல் | ரூ. | 80.00 |
| தமிழ்நாட்டு வரலாறு<br>சங்ககாலம் - அரசியல் | ரூ. | 100.00 |
| கல்குதிரை - 10<br>(தற்கால உலகச்சிறுகதைகள்) | ரூ. | 162.50 |
| திருவாசக ஆராய்ச்சியுரை<br>(சு. அருளம்பலவனார்) | ரூ. | 190.00 |
| நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே<br>(நாவல் - செ. யோகநாதன்) | ரூ. | 180.00 |
| இந்திய விஞ்ஞான வரலாற்றுச் சுருக்கம்<br>(பி. திருஞானசம்பந்தன்) | ரூ. | 80.00 |
| சோழர்கள் - பாகம் 1<br>(கே. ஏ. நீலகண்டசாஸ்திரி) | ரூ. | 200.00 |
| சோழர்கள் - பாகம் 2<br>(கே. ஏ. நீலகண்டசாஸ்திரி) | ரூ. | 200.00 |
| யாழ்ப்பாண சரித்திரம்<br>(முதலியார் செ. இராசநாயகம்) | ரூ. | 487.50 |
| தமிழர் நாட்டுப்பாடல்கள்<br>(நா. வானமாமலை) | ரூ. | 200.00 |
| தமிழக சுற்றுலாத்தலங்கள்<br>(அ. ராம்கோபால்) | ரூ. | 87.50 |
| தமிழ்ச்சுருக்கெழுத்து அகராதி<br>(தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவன வெளியீடு) | ரூ. | 112.50 |
| மனோன்மணீயம் - (விளக்கவுரையுடன்)<br>(பேராசிரியர். சுந்தரம்பிள்ளை) | ரூ. | 70.00 |
| எரிநெருப்பில் இடைபாதை இல்லை<br>(நாவல் - எஸ். அகஸ்தியர்) | ரூ. | 87.50 |
| பஞ்சும் பசியும்<br>(நாவல் - ரகுநாதன்) | ரூ. | 75.00 |

இவற்றுடன் ஆன்மீக, தமிழ்த்துறை சார்ந்த நூல்கள், திணைக்கள வெளியீடுகள் என்பன திணைக்கள விற்பனை நிலையத்தில் விற்பனைக்குள்ளன. காரியாலய நாட்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3மணிவரை இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

Printed by: RAJAN PRINTERS, Colombo - 02. T P. 687800

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org